R. K.

விலை சதம் 5

முதல் பதிப்பு

பக்கங்கள் 6

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்."
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

"சுதந்திரன்"
(நிலப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
8 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா ,, 12-00
1 வருடச் சந்தா ,, 24-00
மானேஜர்
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 2411

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து ஸ்ரீ கார்த்திகை மீ 20உ வெள்ளிக்கிழமை — Colombo, December, 5, 1947 — ஹிஜ்ரி 1367 முஹர்ரம் பிறை 21 | இதழ் 184

ஒரே வகுப்பின் ஆதிக்கம்; சிறுபான்மையோருக்கு பாதுகாப்பு மறுப்பு

உண்மைச்சுதந்திரமாகமாட்டாது

எகிப்து—பிரிட்டன் ஒப்பந்தத்தை சுட்டிக்காட்டி இலங்கைக்கு எச்சரிக்கை

பாராளுமன்றத்தில் திரு. செல்வநாயகம் விளக்கம்:

கமியூனிஸத்தை எதிர்த்துப் போராட திரு. சேனநாயகா அரசியல் வாழ்வைத் துறக்கமாட்டாராம்!

பிரதம மந்திரியின் தீர்மானம் நிறைவேறியது

தமிழ்க் காங்கிரஸ், இந்தியன் காங்கிரஸ், சமசமாஜக் கட்சிகளின் பிரதிநிதிகள் வோட்டளிக்கவில்லை

கொழும்பு, டிச. 4

நேற்று பாராளுமன்றக் கூட்டம் சபாநாயகர் தலைமையில் தொடர்ந்து ஆரம்பித்தபோது சுதந்திர மசோதாவையிட்டு பிரதமர் திரு டி. எஸ். சேனநாயக்கா கொண்டுவந்த குதூகலத் தீர்மானம் பற்றிய விவாதம் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்டது. இச்சபைக்கூட்டத்தில் திருசேனநாயக்காவின் தீர்மானத்துக்கு டாக்டர் என். எம் பெரேரா கொண்டுவந்த திருத்த தீர்மானத்தின் மீது வேறு ஒரு திருத்த தீர்மானம் திரு ஸி. வன்னியசிங்கம், திரு டி. இராமலிங்கம் ஆகியோரால் கொண்டுவரப்பட்டது. திருத்த தீர்மானங்கள் மீது விவாதம் நடைபெற்றன. திருத்த தீர்மானங்களில் முதல் தீர்மானம் சபையில் வாக்கெடுக்கப்பட்டபோது திருத்த தீர்மானத்துக்கு ஆதரவாக 40 பேர்களும் பாதகமாக 59 பேர்களும் வாக்களித்தனர். இரண்டாவது திருத்த தீர்மானத்தின் மீது சபையில் வாக்கெடுக்கப்பட்டபோது சாதகமாக 41 வாக்குகளும் பாதகமாக 58 வாக்குகளும் கிடைத்தன. இரு திருத்த தீர்மானங்களும் தோல்வியுற்றன.

இதன் பின் பிரதம மந்திரி கொண்டுவந்த ஆரம்ப தீர்மானத்தின் மீது சபையில் வாக்கு எடுக்கப்பட்டது. இத் தீர்மானத்துக்குச் சாதகமாக 59 பேர்கள் வாக்களித்தனர். இலங்கை சமசமாஜக் கட்சி அங்கத்தினர், இலங்கை இந்தியன் காங்கிரஸ் அங்கத்தினர், தமிழ்க் காங்கிரஸ அங்கத்தினர் முதலியோர் வாக்களிக்க மறுத்து விட்டனர். இலங்கை கமியூனிஸ்டு கட்சியினரும் போல்ஷவிக் லெனினிஸ்ட் கட்சியினரும் (11 பேர்கள்) பாதகமாக வாக்களித்தனர். திரு டி. எஸ். சேனநாயகா கொண்டுவந்திருந்த தீர்மானம் நிறைவேறியது. இதன் மேல் சபை நடவடிக்கை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பாராளுமன்றம் நேற்று பிற்பகல் 2 மணிக்கு சபாநாயகர் திரு. ஏ. எப் மொலமுரே தலைமையில் ஆரம்பமாயிற்று.

இப்பொழுது சபை முன் விவாதத்துக்கிருக்கும் தீர்மானத்தின் மீது மேலும் ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளதென்றும் அத் திருத்த தீர்மானம் திரு. ஸி. வன்னியசிங்கம், திரு. டி. இராமலிங்கம் ஆகியவர்களின் பெயரில் இருப்பதாகவும் சபாநாயகர் சபையில் தெரிவித்தார்.

பதுளை தொகுதி அங்கத்தவர் திரு. எஸ். எம். சுப்பையா தமது பேச்சைத் தொடர்ந்து ஆரம்பித்து பேசியபோது கூறியதாவது:-

பொருளாதார வளர்ச்சிக்கு இந்தியர் உதவி

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி துறையில் இந்திய தொழிலாளர் மிகப் பெரிய தொண்டுகள் புரிந்துள்ளனர். இப்படித் தொண்டாற்றிய மக்கள் இலங்கையிலிருந்து கட்டாயமாகப்போகவேண்டுமென வாரியப்பொலை தொகுதி அங்கத்தவர் கூறியது எனக்கு ஆச்சரியத்தையே கொடுத்தது.

இலங்கையில் உள்ள இந்திய மக்கள் முன்னேற்றத்தை விரும்பிச் செல்பவர்கள், இலங்கையின் சுதந்திரத்துக்காக அவர்களும் இலங்கை மக்களுடன் சேர்ந்து உழைப்பார்கள்.

இலங்கையின் பாதுகாப்பு இலங்கையர்க்கே

இலங்கையின்பாதுகாப்பைப் பொறுத்த அளவில் பிரிட்டன் ஒரு விஷயத்திலும் தலையிடப்படாது, பாகிஸ்தான் டொமினியன், இந்திய டொமினியன் ஆகியன தங்கள் தங்கள் பாதுகாப்புகளை தாங்களே ஏற்படுத்திக்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளன. அதுபோல இலங்கையும் தனது பாதுகாப்பை தானே தேடிக்கொள்ள அனுமதிக்கப்பட வேண்டும். இலங்கை தனது அயல் நாடுகளான இந்தியா-பாகிஸ்தான் டொமினியன்களுடனும் பர்மாவுடனும் நேசப்பான்மையுடன் நடந்துகொள்ள வேண்டும்.

மந்திரிசபை நடவடிக்கை சரியானதே

திரு. டட்லி சேனநாயகா பேசியதாவது:-

தேசத்தின் தலைவிதியை நிர்ணயித்துக்கொள்ள வேண்டியபடியால் இது முக்கியத்துவம் வாய்ந்த தருணமாக இருக்கிறது. சபையின் ஆலோசனைகளுக்கு முன் மந்திரி சபையும் பிரதமரும் இந்த உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டதைக் கண்டிக்கப்படுகிறது. மந்திரி சபையும் பிரதமரும் இவ்விதம் சபையைக் கலந்துகொள்ளாது செய்திருப்பினும் அது ஒழுங்கு முறையானதுதான். முக்கியத்துவம்வாய்ந்த இத்தகைய விஷயங்களில் மற்ற நாடுகளிலும் மந்திரி சபைகள் இவ்விதம் நடந்துகொண்டுள்ளன அநேக வருடங்களாக அடிமை நாடாக இருந்து சுதந்திரம் பெறுவதில் மந்திரியை மட்டுமல்ல, பாராளுமன்றத்தினர் மட்டுமல்ல, தேசம் முழுமையுமே குதூகலிக்கப்பட வேண்டும். இந்த சுதந்திர நிலையை அடையும் குறிப்பிட்ட தினம் வந்ததும் மக்கள் குதூகலமாக இந்த சுதந்திரத்தைக் கொண்டாடுவார்கள்.

இதன் பின் திரு. டட்லி சேனநாயகா தொடர்ந்து பேசுகையில் டாக்டர் என். எம் பெரேரா குறிப்பிட்ட விஷயங்களைப்பற்றிப் பேசினார். டொமினியன் அந்தஸ்து நாடுகளின் முக்கியத்துவத்துக் கேற்ப மாறும் என்றும் டொமினியன் அந்தஸது என்பதிலும் பார்க்க "சுதந்திரம்" என அந்த மசோதாவில் குறிப்பிடப்பட்டுள்ளது நல்லதென்றும், இப்பொழுது இந்திய பாகிஸதான் டொமினியன்களில் நடக்குப் கலவரங்கள் பற்றியும் கூறிவிட்டு தொடர்ந்து அவர் பேசியதாவது:-

காஷ்மீரில் நடந்த கலவரத்தை அடக்குவதற்கு பண்டித நேருவும் பிரிட்டிஷ் துருப்புகளை உபயோகித்தார். இந்தியப் பாதுகாப்புக்கு பிரிட்டனுடன் உடன்படிக்கை செய்து கொள்வதுபற்றி இந்திய அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

உடன்படிக்கைகள் ரத்துச் செய்யப்படலாம்

இந்த உடன்படிக்கைகள் வேண்டாமென்றபோது ரத்துச் செய்ய முடியுமா என எதிர்க் கட்சியினர் கேட்கின்றனர் இந்த உடன்படிக்கைகளை வேண்டாமென்னும் போது ரத்துச் செய்ய முடியும்.

"அயர்லாந்து உடன்படிக்கையின் கீழ் அங்குள்ள தளங்களை சமாதான காலத்திலும் யுத்த காலத்திலும் பிரிட்டன் உபயோகிக்க அனுமதிக்கப்பட்டுள்ளது."

சுதந்திரப் போராட்டம் தொடர்ந்து நடக்கும்

அம்பலாங்கொடை தொகுதி அங்கத்தவர் திரு. பி. எச். வில்லியம் டி. சில்வா பேசியதாவது:- பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உறுதிமொழிகள் ஒன்றும் கட்டுப்பாடானவைகளாக இல்லை. சமீபத்தில் பிரிட்டிஷ் அயல்நாட்டு மந்திரி விடுத்த அறிக்கை யொன்றில் தங்கள் சாம்ராஜ்யத்தைப் பலப்படுத்திக்கொள்ள தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று குறிப்பிட்டுள்ளார். இலங்கைக்குக் கிடைக்கும்சுதந்திரம்என்பது பிரிட்டன் தனது சாம்ராஜ்யத்தைப் பலப்படுத்த கையாளும் வழிதான். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் உறுதிமொழியுடன் சுதந்திரப் போராட்டம் நின்றுவிட மாட்டாது. சுதந்திரப் போராட்டம் முன்னையிலும் அதிக உக்கிரமாக நடத்தப்படும்.

மேஜர் ஒல்ட்பீல்ட் பேசுகையில், இலங்கையையே தாயகமாகக் கொண்டு இலங்கையில் உழைத்தே தாம் வாழ்ந்து வருவதாகவும் இலங்கையின் சுதந்திரத்திற்காக மக்கள் நடத்திய போராட்டத்தை தாம் கவனித்து வந்ததாகவும் அரசாங்கங்களின் மாற்றங்கள் பற்றியும் கடந்த இருபது வருட காலங்களில் அரசியல் மாற்றங்கள் பற்றியும் இலங்கை சுதந்திரமடைவதைத் தாம் பாராட்டுவதாகவும் கூறினார்.

பிரிட்டிஷ் அரசாங்கத்தை அயல் நாட்டினர் பாராட்டுவது பற்றியும் யுத்தகாலத்தில் பிரிட்டன் அனுபவித்த கஷ்டங்கள் பற்றியும் பிரிட்டனின் துருப்புகள் வாபஸ் பெறப்பட்டதுகள் பற்றியும் எல்லா அங்கத்தினரும் தேச நன்மைக்காக ஒத்துழைக்க வேண்டுமென்றும் கூறினார்.

திரு. டி. எஸ். ஹெட்டியாராச்சி, (திவித்தலை) பேசுகையில் இங்குள்ள தொழிலாளர் சுதந்திரத்தைப் பெறுவதற்காகவும் முதலாளித்துவத்தை ஒழிக்கவும் தங்கள் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவார்களென்றும் கூறினார்.

தண்டகமுவா பிரதிநிதி திரு. ஐ. கே எம். இரியகொல்லா பேசியபின் ஸ்ரீமதி புளோரன்ஸ சேனநாயகா பேசுகையில் இலங்கையில் பிரிட்டிஷ் துருப்புகள் இருக்கும் வரை சுதந்திரமென்று பேசுவதே மடத்தனமென்று கூறினார்.

அப்புத்தளை பிரதிநிதி திரு. ரம்புக்பொதா பேசுகையில், இந்த தருணத்தை உபயோகித்து முழுச் சுதந்திரத்தையும் பெற மக்கள் பாடுபட வேண்டுமென்றும் தேசத்தில் சமயங்களின் நிலைமைகள் மிக மோசமாக இருப்பதாகவும் கூறினார்

மக்களைச் சுரண்டி வாழ்ந்தனர்

தலவாக்கொல்லை தொகுதி அங்கத்தவர் திரு. வேலுப்பிள்ளை பேசியபின் திரு. ரபர்ட் குணவர்தன பேசியதாவது:-

பொது மக்களது சுதந்திரப் போராட்டங்கள் எதிலும் திரு டி. எஸ். சேனநாயகா ஒரு முறையும் கலந்து கொள்ளவில்லை. 1912-ம் வருடம் முதல் பிரதமரும் அவரது சகாக்களும் குடும்பப் போராட்டங்களை நடத்திக்கொண்டும் அரசாங்க உத்தியோகங்களுக்காகப் போராடிக்கொண்டுமே இருந்துள்ளனர். நெடுகிலும் இலங்கையின் பொதுமக்களை இவர்கள் எப்போதும் சுரண்டியே வாழ்ந்துள்ளனர். இந்த சுரண்டல் கைங்கரியத்தை தொடர்ந்து நடத்துதற்கு இவர்கள் இப்பொழுது பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் ஒப்பந்தங்கள் செய்துள்ளனர்.

இந்து சமுத்திரத்தில் பிரிட்டன் ஆதிக்கம்

அகளவத்தை தொகுதி அங்கத்தவர் திரு. சாம் சில்வா பேசுகையில், இலங்கையில் பிரிட்டனுக்கு தளங்கள் கொடுக்கப்பட்டு பிரிட்டிஷ் இராணுவங்கள் இங்கு வைக்கப்பட்டால் இந்து சமுத்திரத்தில் பிரிட்டனே ஆதிக்கம் வகிக்குமென்று கூறினார்.

சுதந்திர மசோதா தஸ்தாவேஜுகள்

காங்கேசன்துறை தொகுதி அங்கத்தவர் திரு எஸ். ஜே. வி செல்வநாயகம் பேசியதாவது:-

"சுதந்திரத்தைப்பற்றிய எல்லா தஸ்தாவேஜுகளும் பிரசுரிக்கப்பட்டுள்ளனவென்று பிரதம மந்திரி கூறியிருந்தார். இரு நாடுகளுக்கிடையேயும் செய்துகொள்ளப்பட்ட இந்த உடன்படிக்கைகள் பரஸபர நலன்களைக் கவனிக்கவே செய்யப்பட்டனவென்று கூறப்படுகிறது.

இதன் பின் சுதந்திர மசோதாவின சட்ட சம்பந்தமான அம்சங்களையும் அரசியல் அம்சங்களையும் விளக்கமாக எடுத்துக் கூறிவிட்டு தொடர்ந்து பேசியதாவது:-

இலங்கையைப் போலவே பிரிட்டனுடன் எகிப்தும்உடன்படிக்கை செய்திருந்தது. இப்பொழுது அந்த உடன்படிக்கையிலிருந்து விடுபட்டுக்கொள்ள மாட்டாது எகிப்து தத்தளிக்கிறது. இலங்கையும் இந்த ஒப்பந்தங்களைப் பொறுத்தமட்டில் பின் வருந்தவேண்டி நேரிடும்.

கொள்கைகளைப்பற்றி எவ்விதம் கூறப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கைகளில் சொற்களை மாற்றும்போது அல்லது புதிதாக சேர்க்கும் போது வித்தியாசங்கள் ஏற்படும் ஜூலை மாதத்தில் இந்திய சுதந்திரச் சட்டத்தை பாராளுமன்றத்தில் பிரிட்டிஷ் அரசாங்கம் கொண்டுவந்தது. அதன் பின் இலங்கையின் சுதந்திர மசோதாவை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் அரசாங்கம் கொண்டுவந்தது. எதிர்க் கட்சியினரால் கொண்டுவரப்படக்கூடிய கோரிக்கைகளுக்காகவே "சுதந்திரம்" என்னும் சொல் உபயோகிக்கப்பட்டிருக்க வேண்டும். உண்மைகளை எடுத்துக் கூறுவதற்காக அங்கத்தினர்கள் தனிப்பட்டவர்களைப் பற்றி கண்டிப்பதா? வித்தியாசங்கள் வித்தியாசங்கள்தான்.

இத்தருணத்தில் மாலைநான் மணியானதால் சபை நடவடிக்கை தேநீர் இடைவேளைக்காக ஒத்திவைக்கப்பட்டது தேநீர் இடைவேளைக்குப் பின் திரு செல்வநாயகம் தொடர்ந்து பேசியதாவது:-

உள்நாட்டு அரசியல் பிரச்னை

இந்த புதிய நிலைமையில் உள்நாட்டு அரசியல் அமைப்பு விஷயத்தில் கவனமெடுக்கப்பட வேண்டும். இந்த நாட்டின் சிறுபான்மையினரின் பிரதிநிதிகளின்சகாக்களில்ஒருவராகவே நான் இருக்கிறேன். ஒரு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதென்பது உண்மையே. ஆனால வகுப்புவாதப் பிரச்னை இருப்பது பற்றி ஆலோசிக்கப்படவில்லை.

சிறுபான்மை மக்கள் நிலை

இலங்கையின் ஒரு பகுதி மக்கள் தேசத்தின் அரசாங்கத்தின் மீது அரசியல் ஆதிக்கத்தை சுமத்துவதாயிருப்பின் அது உண்மைச் சுதந்திரமாக இருக்க மாட்டாது. இந்த நாட்டின் ஆட்சியை நடத்துவதில் சம அந்தஸ்தும் அரசியல் ஆதிக்கமும் தமிழ் மக்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. உலகம் முழுமையிலும் சிறுபான்மையினர் பிரச்னைபெரும் பிரச்னையாகவே இருக்கிறது. இந்த நிலைமை அப்பிரச்னை தீர்க்கப்படும் வரையும் தொடர்ந்து இருக்கும். இந்தியாவில் இந்தப் பிரச்னை இருந்தது. இன்று தேசத்தை இரு துண்டாக்கி அப்பிரச்னைக்கு முடிவு காணப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில்:

தமிழ் மக்கள் சார்பாக தமிழ்க் காங்கிரஸ் பேசுகிறது:

வடக்கு தொகுதியில் கிறிஸ்தவ அங்கத்தவர்

சுயேச்சை அங்கத்தவரின் பாராட்டு

கொழும்பு, டிச. 4

இன்று தமிழ் மக்களின் மாபெரும் ஸ்தாபனமாக விளங்குகின்றது தமிழ்க் காங்கிரஸ. தமிழ் மக்கள் எல்லோரும் இந்த ஸ்தாபனத்தினை ஆதரிக்கவில்லையென்று ஒருசிலர் ஐந்தாம் படை வேலை செய்ய முனைகின்றனர். தமிழ்க் காங்கிரசுடன் தேர்தலில் எதிர்த்துப் போராடிய சுயேச்சை அங்கத்தவர் "தமிழ் மக்களின் சார்பாக தமிழ் காங்கிரஸ பிரதிநிதிகளே இன்று பாராளுமன்றத்தில் பேசுகின்றனர் என்பதை என் உள் மனத்துடன் கூற விரும்புகின்றேன்" என்று எடுத்துக் காட்டியுள்ளார்.

பாராளுமன்றக் கூட்டத்தில் நேற்று முன்தினம் சுதந்திர மசோதா மீது விவாதம் நடந்தபோது சுயேச்சை அங்கத்தவர் திரு ஏ எல் தம்பிஐயா பேசுகையில் சுதந்திர மசோதாபற்றி குறிப்பிட்டு, இச்சுதந்திரம் இலங்கையிலுள்ள எல்லா மக்களுக்கும் - எல்லாச் சமூகத்தினருக்கும் உரியதெனவே தாம் நம்புவதாகவும் குறிப்பிட்டு விட்டு தொடர்ந்து பேசியதாவது:-

பாராளுமன்றத்திலே தமிழ் மக்கள் சார்பாக தமிழ்க் காங்கிரஸ பேசுகின்றது என்பதை தமிழ் காங்கிரசுடன் எதிர்த்துப் போராடிய நான் என் உள் மனத்துடன் கூற விரும்புகிறேன். வகுப்புவாத செய்திகளை தமிழ்க் காங்கிரஸ் வெளியிட்டதை என்னால் மறுக்க முடியாதுவிடினும் இலங்கையிலுள்ள மற்றும ஸதாபனங்களும் அதே போன்று வகுப்புவாத செய்திகளை வெளியிட்டுள்ளன என்பதையும் மறுக்க முடியாது.

கிறிஸதவ அங்கத்தவர்

இதுவரை காலத்திலும் வடக்கேயுள்ள தொகுதிகளின் பிரதிநிதிகள் இந்துக்களாகவே இருந்துள்ளனர். ஆனால் இம்முறை ஒரு கிறிஸதவ மதத்தினரும் பெருவாரியான அதிக வாக்குகளைப் பெற்று பாராளுமன்றத்துக்குத் தெரியப்பட்டுள்ளார். இப்பெருமை தமிழ்க் காங்கிரஸிற்கே உரியதாகும்.

பிரதமர் பதில்

இந்த நேரத்தில் மாலை ஐந்து மணியானதால் திரு. சேனநாயகாவை பதிலளிக்கும்படி (பிரதமர்) சபாநாயகர் தெரிவித்தார். பிரதமர் பேசுகையில சுதந்திரம் வழங்கப்பட்டுவிட்டதென்பதைக் கேட்டு எதிர்க் கட்சியினர் திடுக்கிட்டுள்ளனர் என்றும் அந்த நிலையில் இருந்து மீள்வதற்கு அவர்களுக்குகாலம் வேண்டுமென்று கேட்கப்படுவதாகவும் தாம் தேசியக் காங்கிரஸில் இருந்து விலத்தியதன் காரணத்தையும்கூறிவிட்டு தொடர்ந்து பேசியதாவது:-

கமியூனிஸத்தின் ஆதிக்கம்

தேசிய காங்கிரஸில் கமியூனிஸ்டுகள் சேர்ந்ததினால்தான் நான் விலகினேன். இலங்கையின் சுதந்திரத்தைப் பெறும் போராட்டத்தில் அவர்கள்முட்டுக்கட்டையாக இருக்கக்கூடும் என்பதற்காகவும் நான் காங்கிரஸின் தொடர்புகளை நீக்கிவிட்டேன். கமியூனிஸடுகளின் சுதந்திரம் என்பதற்குரிய கருத்துக்களும் அதனைப் பெறுவதற்கு அவர்கள் கையாளும் வழிகளும் என்னுடைய கருத்துக்களிலும் நான் கையாண்ட வழிவகைகளிலும்பார்க்க வித்தியாசமானவைகளாகும். அவர்கள் தேசத்திலே வகுப்பு வித்தியாசங்களை ஏற்படுத்துவது அவசியமென நம்பியுள்ளனர். கமியூனிஸ்ட் அரசாங்கத்தை ஏற்படுத்தவே அவர்கள் விரும்புகின்றனர். கமியூனிஸடுகள் ஆதிக்கத்தைப் பெறின் அவர்கள் தேசத்தைக் குட்டிச் சுவராக்கிப் போடுவார்கள். புரட்சியால் சுதந்திரத்தைப்பெற அவர்கள் விரும்புகின்றனர். தங்கள் தங்கள் விவகாரங்களை அவர்களே கவனிக்க வேண்டுமென்னும் விருப்பத்தின் காரணமாக பிரிட்டன் எங்களுக்கு உதவி புரிய முன் வந்துள்ளது.

தொடர்ந்து அரசியலில் இருப்பேன்

உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுமுன் தேச மக்களுடன் கலந்தாலோசிக்கப் படவில்லை என்று குறை கூறப்படுகிறது. பிழையை நான் செய்துள்ளதாக கூறப்பட்டது. அரசியலில் இருந்து நான் ஓய்வெடுக்க விரும்புவதாக கூறியிருந்ததை பிழையாககருதப்படுகிறது. இப்பொழுதுள்ள நிலைமையில் நான் தொடர்ந்து அரசியல் துறையில் உழைக்கவேண்டியிருக்கிறது அவசியமென நான் நம்புகிறேன்.

எத்தனையோ எதிர்ப்புகள் எல்லாம் இருந்தும் உண்மையான சுதந்திரம் இப்பொழுது கிடைத்துள்ளது. கிடைத்துள்ள இந்த வெற்றியைக் குறித்து குதூகலிக்கும்படி எல்லோரையும் அழைக்கிறேன். இந்நாட்டிலே கமியூனிஸ அரசாங்கத்தை ஸதாபிப்பதை அநுமதிக்க முடியாது. இப்பொழுது கமியூனிஸடுகள்கைப்பற்றியுள்ள ஸதானங்கள் விரைவில இழக்கப்படலாம். இந்த தீ

(4-ம் பக்கம் பார்க்க)

சுதந்திரன்
THE "SUTANTIRAN."
194 ஏ, நட்டராத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து ஆண்டு கார்த்திகை மீ 20உ
வெள்ளிக்கிழமை

செவிடன் காதில் ஊதிய சங்கு

எகிப்து தேசம் "சுதந்திரம்" அடைவதற்கு முன் பிரிட்டிஷ் ஆட்சிக்குட்பட்ட நாடாக இருந்தது. பிரிட்டிஷாருடன் ஒப்பந்தங்கள் செய்துகொண்ட பின்தான் எகிப்துக்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. அந்த எகிப்து - பிரிட்டன் ஒப்பந்தத்தில் பிரிட்டிஷ் படைகள் எகிப்திலிருந்து வெளியேறும் தினம் குறிக்கப்படவில்லை. ஆகவே பிரிட்டிஷ் படைகள் நிரந்தரமாக எகிப்தில் வைக்கப்பட்டிருந்தன. அந்த ஒப்பந்தப்படி எகிப்து நேச தேச ஸ்தாபனத்திலும் அங்கத்துவம் வகித்து வருகிறது. அந்த ஸ்தாபன மூலமாவது பிரிட்டிஷ் படைகளை வெளியேற்ற எகிப்து அரசாங்கம் சமீபத்தில் முயன்றது. அதுவும் பலிக்கவில்லை.

இந்தச் சம்பவத்தைப் பார்த்தாவது இலங்கைப் பிரதம மந்திரி பிரிட்டனின் குட்டுக்களை உணர்ந்துகொள்ள வேண்டும் என்று காங்கேசன் துறைப் பிரதிநிதி திரு செல்வநாயகம் பிரதிநிதிகள் சபையில் கூறியுள்ளார். அவர் அவ்விதம் சொல்லுவதில் அர்த்தமுண்டு. ஏனென்றால் அவ்வித ஒப்பந்தம் இலங்கைப் பொறுப்பாட்சி சம்பந்தமாகவும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை பிரிட்டன் பாதுகாப்பு ஒப்பந்தத்தில் பரஸ்பரம் இலங்கையும் பிரிட்டனும் தங்கள் படைகளை ஒருவருக்கு ஒருவர் உதவிக் கொள்ளுவர் என்று கூறப்பட்டிருக்கிறது. அத்துடன் "அன்ட்" என்னும் ஒரு ஆங்கில வார்த்தையால் இலங்கை விரும்பாவிட்டாலும் பிரிட்டிஷ் படைகளை இங்கு வைத்திருக்கக்கூடிய விதத்தில் பிரிட்டிஷார் ஒப்பந்தம் செய்துள்ளனர். ஆகவே எகிப்திய நிலைமை இலங்கையிலும் ஏற்படச் சான்ஸ் உண்டு. இதைக் கண்ணிருந்தும் குருடர்கள் போன்று அறிந்துகொள்ள பிரதம மந்திரி மறுத்து விட்டார். மறக்காது மட்டுமல்ல தாம் ஸர் ஒலிவர் குணதிலகா மூலம் குடியேற்ற நாட்டு மந்திரியைக் கொண்டு "டொமினியன் அந்தஸ்து" என்ற பதத்தை "சுதந்திரம்" என்று மாற்றி விட்டதாகவும் விளாசி இருக்கிறார். ஸர் ஒலிவரும், இலங்கை கவர்னரும் லண்டனில் இலங்கைச் சுதந்திர பேச்சு வார்த்தைகள் நடத்தியதாகவும் அவர் அம்பலப்படுத்தியிருக்கிறார். லண்டனில் ஸர் ஒலிவர் நின்ற பொழுது அவர் இலங்கையின் பொக்கிஷக் காரியதரிசியாக இருந்தவர். அரசாங்கத்தின் அடிமையான ஒரு பொக்கிஷக் காரியதரிசி தேச மக்களின் எதிர்கால அரசியலை இட்டு பேச்சுவார்த்தை நடத்துவது இலங்கையில்தான் உண்டு. வேறு எந்தத் தேசத்திலும் கிடையாது. இந்தக் கேவல நிலையைப் புகழுகிறார் பிரதம மந்திரி.

இந்த வகையான பிரதம மந்திரி உள்ள நாட்டில் பிரிட்டிஷார் ஆதிக்கஞ் செலுத்தாமல் வேறு என்ன செய்வார்கள். சாகத் துணிந்தவன் மருந்து குடியான். திரு செல்வநாயகத்தின் அரசியல் தீர்க்கதரிசனமும் செவிடன் காதில் ஊதிய சங்குதான்! அப்படியே முடிந்தும் விட்டது.

1000 டன் உருளைக்கிழங்கு

இலங்கை வந்து சேர்ந்தது

கொழும்பு, டிச 4

நேற்று 1000 டன் உருளைக்கிழங்கு, 3000 டன் மாவு முதலியவற்றை ஏற்றி வந்த 'கனரா' என்னும் கப்பல் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்தது. இப்பொழுது அதில் உள்ள பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

சிங்கக்கொடியே தேசீயக் கொடியாக வேண்டும்

ஒற்றை வோட்டினால் நிறைவேறிய தீர்மானம்

கொழும்பு முனிசிபல் சபையின் முடிவு

கொழும்பு, டிச. 4

கொழும்பு முனிசிபல் சபையினர் சுதந்திர இலங்கையின் தேசீயக்கொடியாக சிங்கக்கொடியைப் பாராளுமன்றம் அங்கீகரிக்கவேண்டுமென்று ஒரு தீர்மானத்தை நேற்றிரவு நிறைவேற்றினர்.

இலங்கை சுதந்திரம் பெற்றபின் இதைப்பற்றி அபேட்சிக்கலாம் என்று கொண்டுவரப்பட்ட திருத்தத் தீர்மானத்திற்கு 12 வோட்டுகளும் தீர்மானத்திற்கு 12 வோட்டுகளும் கிடைத்தன. ஆனால் மேயர் கலைவிட்டு தமது வோட்டைச் சாதகமாக அளித்ததால் தீர்மானம் ஒற்றை வோட்டினால் நிறைவேறியது.

லஞ்சம் கொடுத்ததாக வழக்கு

புனர் விசாரணை செய்ய உத்தரவு

கண்டி, டிச 4

கம்பளையைச் சேர்ந்த செல்லன் ஐயரூன் என்பவர் போலீஸ் சப் இன்ஸ்பெக்டரான எச். பி. சந்திரசேகர என்னும் போலீஸ் அதிகாரிக்கு ரூபா 400 லஞ்சம் கொடுக்க முயற்சித்ததாக ஓர் வழக்குத் தொடரப்பட்டது.

இவ்வழக்கு கண்டி டி. எம். ஸி ரொபேர்ட்ஸால் விசாரிக்கப்பட்டபோது எதிரிக்கு ரூபா 500 அபராதம் விதிக்கப்பட்டது.

எதிரி இத்தீர்ப்பை மாற்றும்படி மனுச்செய்துகொண்டார்.

இம் மனு விசாரணையின் பின்னர் ஜஸ்டிஸ் டயஸ் வழக்கிலே கப்பன சாட்சிங்கள் அனுமதிக்கப்பட்டதால் வழக்கை புனர் விசாரணை செய்ய வேண்டும் என்று தீர்ப்பளித்தார்.

இவ்விசாரணை கண்டி மாஜிஸ்திரேட் கோர்ட்டால் நடைபெறும் எனத் தெரிகிறது.

போலீஸ் உடையில் கள்வர்களா?

வலஸ்முல்லையில் நடைபெற்ற சம்பவம்

வலஸ்முல்லை, டிச. 4

தானடுவையில் இருக்கும் ஒரு வீட்டில் போலீஸ் உடை தரித்த ஒரு கோஷ்டியினர் புகுந்து லைசென்ஸ் இல்லாத ஒரு துப்பாக்கியைத் தேட வந்ததுபோல் நடித்து, பின்னர் அங்குள்ள பொருட்களைக் களவாடிச் சென்றதாக ஓர் புகார் செய்யப்பட்டது.

இது சம்பந்தமாகப் போலீஸார் புலன் விசாரித்து வருகின்றனர். எதிரிகள் எல்லோரும் தலைமறைவில் இருக்கின்றனர்.

சட்ட மாணவர் கிரிக்கெட் கோஷ்டி

டிசம்பர் 11-ல் இந்தியா பிரயாணம்

கொழும்பு, டிச. 4

சட்ட மாணவர்களுடைய கிரிக்கெட் பந்தாட்டக் கோஷ்டி இம் மாதம் 11-ம் தேதி தமது இந்திய சுற்றுப் பிரயாணத்திற்குக் கிளம்புவார்கள் எனத் தெரிகிறது.

இதற்குக் காப்டன் வி. பெரேரா என்பவராகும்.

வருமான வரி வழக்குகள்

கொழும்பு, டிச 4

பொரளையைச் சேர்ந்த காசல் வீதி வாசியான ஜி. எப். ஸி. கல்லென் மீது வருமான வரி இலாகாவால் மூன்று வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

கீழ்க் கண்ட தொகைகள் அவரிடம் இருந்து கோரப்பட்டுள்ளன. ரூ. 949-41 ரூ. 8,632-14 ரூ. 4,466-16.

பாலஸ்தீனத்தில் 12 மணி நேர யுத்தம்

ஜாபா-டெல்அவிவ் நகர்களின் எல்லையில் அமளி

எகிப்தில் ஆர்ப்பாட்டங்கள்; ஈராக்கில் யுத்த ஒத்திகை, சிரியா ராணுவம் ஆயத்தம்

காமன்ஸ் சபையில் குடியேற்ற நாட்டு மந்திரி அறிக்கை

யூத நாட்டுக்கு அமெரிக்க கடன்

பாதுகாப்பில் ரஷிய துருப்புகள் கலந்துகொள்ளாதிருக்க அமெரிக்கா நடவடிக்கை

ஜெருசலேம், டிச. 4

ஜாவா நகருக்கும் டெல்அவிவ் நகருக்கும் இடையே யுள்ள எல்லையில் யூதர்களுக்கும் அராபியர்களுக்கும் யுத்தங்கள் நடைபெறுகின்றன. மற்றும் பல இடங்களிலும் போராட்டங்கள் நடைபெறுகின்றன. அராபியரின் 3 ஸ்தலங்களை யூதப்புரட்சிக்காரர்கள் கைப்பற்றியதாக ஹாகனாத் அறிவிக்கிறது. அராபியர்கள் யூதர்களின் ரத்தத்தைச் சிந்துவார்களேயாகில் யூதர்கள் கடுமையான நடவடிக்கை எடுப்பார்கள் என்றும் எச்சரிக்கிறது.

பாலஸ்தீனத்தைத்தாக்க சிரியாவில் தயாராக விருக்கும் அராபிய ராணுவத்துடன் சேர்ந்துகொள்ள இன்று அதிகாலையில பாலஸ்தீனத்திலுள்ள அராபியர்கள் பாலஸ்தீன எல்லையைக் கடந்து சிரியாவுக்குள் சென்றார்கள்.

ஹைபா நகரிலுள்ள யூதர்களுக்குச் சொந்தமான பெரியதோர் மரத்தொழிற்சாலையை அராபியர்கள் தாக்கித் தீயிட்டனர். தாக்கிய அராபியர்களை யூதர்கள் எதிர்த்தனர். மரத்தொழிற் சாலையில் பெட்ரோலை ஊற்றி அராபியர் நெருப்பிட்டனர். பெருந்தீ பற்றியெரிந்தது. ஹைபா துறைமுகத்திலுள்ள பெட்ரோல் தாங்கிக்கு ஆபத்து ஏற்படக்கூடியதாக இருந்தது. நெருப்பை அணைக்க எல்லா தீயணைக்கும் படைகளும் தருவிக்கப்பட்டன.

நேற்றிரவு அராபியர்கள் யூதர்கள் நகரமான டெல்அவிவ் நகரிலுள்ள மின்சார நிலையத்தைத் தாக்கினர்.

அராபியர்களின் மூன்று தின வேலை நிறுத்தத்தில் நேற்று இரண்டாவது நாளாகும்.

வேலை நிறுத்தத்தைக் கைவிடும்படி பாலஸ்தீன சர்க்கார் காரியதரிசி சர் ஹென்றி கர்னி அராபியர்களுக்கு உத்தரவிட்டார். அதனால் நாட்டிற்கு அபாயம் வருகிறதென்று அவர் அராபிய மேல் கமிட்டி காரியதரிசி டாக்டர் ஹுசைன் காலிடியிடம் தெரிவித்தார்.

இருதினங்களாக நடைபெற்ற வகுப்பு யுத்தத்தில் 12 அராபியரும் யூதரும் மாண்டனர். காலிகளால் இக் குழப்பங்கள் நடைபெறுவதாகவும் இதைப்பற்றி தானும் சர்க்கார் காரியதரிசியும் ஆலோசித்து வருவதாகவும் டாக்டர் ஹுசைன் தெரிவித்தார். டெல்அவிவ் நகருக்கும் ஜாபா நகருக்குமிடையே இரு வகுப்பினருக்குள்ளும் 12 மணி நேரம் யுத்தம் நடைபெற்ற எல்லைப்புற ஸ்தலத்தை பிரிட்டிஷ் துருப்புகள் நேற்றிரவு கைப்பற்றின.

வீட்டுமாடி உச்சிகளிலிருந்து நேற்றிரவு அராபியர்களும் யூதர்களும் பழைய ஜெருசலேம் நகரில் போராடினர். டெல்அவிவ் யூத நகரிலுள்ள மின்சார நிலையத்தை ஆயுதந் தரித்த அராபியர்கள் நேற்றிரவு தாக்கினர்.

ஹைபா நகரிலுள்ள வர்த்தக ஸ்தலங்களிலிருக்கும் கிங்ஸ்வே பகுதியில் அராபியர் கூட்டம் கற்கள் தடிகளுடன் புகுந்து யூதர் ஹோட்டலைத் தாக்கிற்று. அக்கூட்டத்தின் நடுவே ஒரு வீட்டு மாடியிலிருந்து ஒரு வெடிகுண்டு வீசப்பட்டது. நேற்று காலை மற்றொரு அராபியக் கும்பல் யூதர் வியாபார ஸ்தலங்களுள்ள கிர்பெட்டில் புகுந்தது. அக்கும்பல்மீது ஒரு வெடிகுண்டு வீசப்படவே கூட்டம் கலைந்தது.

லிடியா நகரில் அராபியர்கள் ஒரு யூதர் பல் வைத்தியசாலையைச் சூறையாடினர்.

ஜெருசலேமில் ஏற்பட்டுள்ள அபாயகரமான நிலைமையைப் பற்றி ஆலோசிக்க அராபிய மேல் கமிட்டியின் அவசரக் கூட்டம் நேற்று காலை கூடியது.

மதப்போருக்கு அழைப்பு

கெய்ரோ, டிச. 3

இங்கு பிரசுரமாகும் எகிப்து அராபிய காலை தினசரிப் பத்திரிகையொன்றில் அகில உலக அராபிய மக்களையும் முஸலிம் மக்களையும் மதப் போர்புரியும்படி அழைத்து ஒரு அறிக்கை பிரசுரமாயிற்று. இந்த அறிக்கை கெய்ரோ நகரில் பெரும் பரபரப்பை உண்டுபண்ணியிருக்கிறது. அல்அஜார் இஸ்லாமிய சர்வகலாசாலை உலாமா சபையார் இந்த அறிக்கையை வெளியிட்டனர். உலாமா சபை சனிக்கிழமை மீண்டும் கூடி எகிப்து மன்னர் அரண்மனை வாசல் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்த உத்தேசித்திருக்கின்றனர். பாலஸ்தீன அராபியர்களுக்கு ஆதரவளிக்கும்படி அவர்கள் மன்னரை வற்புறுத்துவார்கள்.

அல் அஜார் சர்வகலாசாலையைச் சேர்ந்தவர்களுக்கு யுத்தப் பயிற்சியளிக்க மேஜர் முகம்மது பகர்த தலைமையில ஒரு கமிட்டியையும், நிதி திரட்ட மற்றொரு கமிட்டியையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். உலாமாக்கள் தங்கள் சம்பளத்தில் 5 சத விகிதம் இந்நிதிக்கு உதவ நிச்சயித்திருக்கிறார்கள். இப்பொழுது முதலாவது 670 பவுண் சேர்ந்துவிட்டது.

அராபிய உலகம் எதிர்க்கும்

பாக்தாத், டிச 3

பாலஸ்தீனத்தைப் பிரித்து யூதர் நாட்டைச் சிருஷ்டிப்பதை அராபிய உலகம் எதிர்க்கத் தீர்மானித்திருக்கிறது.

பாலஸ்தீனத்தில யூதர் நாடு சிருஷ்டிப்பதைப் பார்த்துக்கொண்டு அராபிய உலகம் உயிர்வாழ முடியாதென்று ஈராக் பிரதம மந்திரி ஜாபூர் ஈராக்கத் தெரிவித்தார்.

அராபிய லீகின் பொருளாதாரக் கமிஷன் தலைவரும் ஈராக்கின் மாஜி பிரதம மந்திரியும் ஈராக்கின் முதிர்ந்த ராஜதந்திரியுமான அலசாவிதி, யூதர்கள் ஆக்ரமிப்பை அராபிய நாடுகள் பலமாக எதிர்த்தே தீரும் என்றார்.

ஈராக் செனட் சபை உபதலைவர் அல்பஸாம், பிரிவினைத் தீர்மானத்தை ஆதரித்த நாடுகளுக்கு அராபிய நாடுகள் பொருளாதாரச் சலுகை காட்டாது அச்சலுகைகளை ரத்துச் செய்ய வேண்டுமென்றார்.

ஈராக்கின் மாஜி ராணுவத் தலைவர் ஜெனரல் பாஷ தலைமையில் பாலஸ்தீன யுத்தம் ஆரம்பிக்க படை திரட்டப்பட்டு வருகிறது. இதுவரை 30 ஆயிரம் பேர் இந்த ராணுவத்தில சேர்ந்திருக்கிறார்கள்.

கிரேக்க கல்லூரி தாக்கப்பட்டது

கெய்ரோவில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்து ஒரு கிரேக்க கல்லூரியையும் கிரேக்க ரொட்டிக் கிடங்கையும் தாக்கி ஜன்னல்களைத்தவிடு பொடியாக்கினர்.

அலெக்சாண்டிரியாவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 12 யூதர்கள் காயமடைந்தனர்.

அராபிய லீக் கவுன்ஸில் கூட்டம் 7-ம் தேதிக்குப் பதில் 8-ம் தேதி கூட்ட காரியதரிசி முடிவு செய்திருக்கிறார்.

அலெக்சாண்டிரியாவில் அமெரிக்க ஸ்தானிகக் கட்டிடத்தை ஜனங்கள் வளைந்துகொண்டு அக் கட்டிடத்தைத் தாக்க முயன்றனர். மாணவர்கள் அக் கட்டிட மாடிப் படியைத் தகர்க்க முயன்றபோது போலீஸார் வந்து தடுத்தனர்.

ஈராக்கிலுள்ள அரசியல் கட்சிகள் மதஸ்தாபனங்கள் வழக்கறிஞர் சங்கம் எல்லாம் ஈராக் மக்களை வேலை நிறுத்தம் செய்யும்படி கேட்டுக்கொண்டிருக்கின்றன.

50,000 பேர்கொண்ட ஈராக் ராணுவத்தின் யுத்த ஒத்திகையை ஈராக் மன்னர் பிரதிநிதி அமீர் அப்துல் இல்லாவும், லெபானன் குடியரசுத் தலைவர் எலகூரியும் பார்வையிட்டனர்.

டிரான்ஸ்ஜோர்டானில் அம்மன் தலைநகரில் நேற்று ஆர்ப்பாட்டம் செய்த அராபியர்கள் ஈராக் பெட்ரோலியம் கம்பெனியைச்சேர்ந்த பைப்லைன் தொழிற்சாலையைத் தாக்கினர். அமெரிக்க யந்திரத் தொழில் நிபுணர்கள் விடுதியைச் சூறையாடி அவர்கள் வாசஸ்தலத்தைத் தீயிட்டனர்.

யூதர் நாடு சிருஷ்டிக்கப்படுவதை எதிர்த்து பாலஸ்தீன அராபியர்களுக்கு உதவவேண்டுமென்று டிரான்ஸ்ஜோர்டான் பாராளுமன்றம் தீர்மானித்தது.

குடியேற்ற நாட்டு மந்திரி அறிக்கை

லண்டன், டிச 3

பிரிவினைத் திட்டத்தை அமுல் செய்வதில் ஐக்கிய தேச ஸ்தாபனத்திற்கு பிரிட்டன் உதவி செய்யுமா என்று கேட்டதற்கு காமன்ஸ் சபையில் பிரிட்டிஷ் குடியேற்ற நாட்டு மந்திரி கூடிய சீக்கிரம் பாலஸ்தீனம்பற்றி பிரிட்டிஷ் சர்க்கார் பாராளுமன்றத்தில் ஒரு அறிக்கை சமர்ப்பிப்பார்களென்று தெரிவித்தார். பிரிட்டன் வெளியேறும் வரை பாலஸ்தீனத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் அமைதியை நிலைநாட்டுவார்களென்றும் இதைப்பற்றி பாலஸ்தீனத்திலுள்ள அராபியத் தலைவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதென்றும் ஆகஸ்ட் முதல் தேதிக்குள் பிரிட்டிஷ் துருப்புகள் காலி செய்யப்பட்டு விடுமென்றும் யூதருக்கு விரோதமாக போராட்டம் நடைபெறுகிறதென்றும் யூதப் புரட்சிப் படையினர் நிலைமையை சமாளிக்கின்றனரென்றும் தெரிவித்தார்.

சோவியத் துருப்புகள்பற்றி அமெரிக்க பீதி

வாஷிங்டன், டிச. 3

பிரிவினைத் திட்டம் அமுலாகும் சமயம் அதிக குழப்பமேற்படின் பாலஸ்தீனத்தைப் பாதுகாக்க சர்வ தேசப் படையை பாலஸ்தீனத்தில் நிறுவும்போது ரஷிய துருப்புகள் முக்கியமான இப்பகுதியில் பிரவேசிக்காது எவ்விதம் தடுப்பதென்ற கவலை அமெரிக்காவில் ஏற்பட்டிருக்கிறது.

பாலஸ்தீனத்தைப் பாதுகாக்க அமெரிக்க தொண்டர் படையொன்று திரட்ட வேண்டுமென்றும் சோவியத் துருப்புகள் பாலஸ்தீனத்தில் பிரவேசிக்காதிருக்க அதுதான் உபாயமென்றும் செனட்டர் ஓவன் புருஸ்டர் தெரிவித்தார்.

யூதருக்கு அமெரிக்க கடன்

நியூயார்க், டிச 3

யூத அகதிகளை பாலஸ்தீனத்தில் குடியேற்ற அமெரிக்கா பதிமூன்றரைக் கோடி ரூபாய் கடன் கொடுத்துதான் யூத அதிகாரிகள் ஏற்பாடு செய்து வருகிறார்கள். உலக பாங்கிலிருந்தும் இன்னும் அதிக தொகை கடன் வாங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. ஜார்டான் நதிப் பள்ளத்தாக்கில் நீர்ப்பாசனத் திட்டம் அமைக்க இப்பணம் செலவிடப்படும். இதனால் யூத பாலஸ்தீனத்திற்கும் அராபிய பாலஸ்தீனத்திற்கும் பயன் ஏற்படும்.

பாலஸ்தீனத்தில் பிரிட்டனின் நிர்வாகத்தை ஏற்றுக்கொள்ள ஐக்கிய தேசக் கமிஷன் பாலஸ்தீனத்திற்கு எப்பொழுது வரும் என்பதுபற்றி ஐக்கிய தேச ஸ்தாபன பிரிட்டிஷ் பிரதிநிதி கடோகன் ஐக்கிய தேச ஸ்தாபன காரியதாசியை நேற்றிரவு சந்தித்துப் பேசினார்.

(ராய்ட்டர்)

கம்பஹா, டிச. 4

ஆறு வெடிகளைத் தீர்க்க வல்ல ஒரு சுழல் துப்பாக்கியை வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்ட திமோதியாஸ் ரணசிங்க என்பவருக்கு ரூ 250 அபராதம் விதிக்கப்பட்டது.

பாராளுமன்ற அங்கத்தினர் மீது வழக்கு

சுப்ரீம் கோர்ட்டில் விசாரிக்கப்படும்

கொழும்பு, டிச. 5

மொரட்டுவைப் பகுதி பாராளுமன்ற அங்கத்தினர் சோமவீர சந்திரசிறி என்பவர் மீதும் டொன் சந்திரதாச கன்டகே என்பவர் மீதும் 'நிதாச' பத்திரிகையில் திரு டி. எஸ். சேனநாயகாவையும் அவரது மந்திரி சபையையும் தாக்கி அவதூறான ஒரு கட்டுரை வெளியிட்டதாகவும், இன்னோர் கட்டுரையில் திரு டட்லி சேனநாயக்காவை அவதூறு செய்ததாகவும் கொழும்பு டிஸ்டிரிக் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கு உதவி மாஜிஸ்டிரேட் பிரெட் அலெஸால் விசாரணை செய்யப்பட்டது.

விசாரணை முடிவில் பிரஸ்தாப வழக்கு சுப்ரீம் கோர்ட்டில் விசாரணை செய்யப்பட வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

செக் மோசடி வழக்கு

தெமட்டகொடை வாசி மீது இரு குற்றச் சாட்டுகள்

கொழும்பு, டிச. 4

தெமட்டகொடையைச் சேர்ந்த டொன் கில்பேர்ட் ஹெட்டியாராச்சி என்பவர் மீது இரண்டு செக் மோசடி வழக்குகள் தொடரப்பட்டிருக்கின்றன.

ஒன்றில் வாக்கர் அன் கிரீக் கம்பனியாரிடம் ரூ. 678 க்கு ஒரு செக் கொடுத்து 8 பெட்டிகள் நிறைந்த கம்பி ஆணிகளைப் பெற்றுச் சென்றதாகவும் அதன் பின்னரே மேற்படி நபருக்கு வங்கியில் பணம் இல்லை என்பது தெரிய வந்ததாகவும் கூறப்பட்டது.

மற்ற வழக்கில் அப்துல்சுபூர் அன்ட் கம்பெனியைச் சேர்ந்த ராஸ ஏ. வகீலிடம் 1300 ரூபாய் தொகைக்கான 3 செக்குகள் கொடுத்ததாகவும், 3 செக்குகளும் மாற்றப்படாமலே இலங்கை வங்கியினரால் திருப்பி அனுப்பப்பட்டு விட்டதென்றும் சொல்லப்பட்டது.

செவ்வாய்க்கிழமை இவ்வழக்கில் எதிரி ஆஜராகவில்லை. அவர் சார்பில் சமர்ப்பிக்கப்பட்ட வைத்திய சர்டிபிகேட்டை கோர்ட்டார் ஏற்றுக்கொள்ள மறுத்து அவர் மீது வாரண்டு பிறப்பித்துள்ளனர்.

திரிபிடகத்தைத் தமிழில் மொழிபெயர்க்கவேண்டும்

சென்னைக் கூட்டத்தில் ஆலோசனை

சென்னை, நவ. 29

நவம்பர் 23-ம் தேதி பெரியமேட்டில் பர்மியர் சிங்களவர், தமிழர் ஆகியோரின் ஒரு கூட்டம் டபிள்யூ. டி. இ. பெரேரா தலைமையில நடைபெற்றது.

அப்போது பிக்குநிலவாக்கே சோமானந்த தமிழில திரிபிடகத்தை மொழிபெயர்க்கவேண்டுமென்று குறிப்பிட்டார். அவர் தமது பிரசங்கத்தை தமிழிலும் சிங்களத்திலும் நிகழ்த்தினார்.

பிக்கு சோமானந்தா மகா போதி சங்கத்தின் பிரதிநிதி ஆவர். கூட்டமுடிவில் புத்ததர்ம பிரசார சபா என்ற பெயரில் ஓர் சங்கத்தை நிறுவத் தீர்மானிக்கப்பட்டது.

வரக்கப்பொலைப் பகுதியில் கொலை

வரக்கப்பொலை, டிச. 4

வரக்கப்பொலைப் போலீஸ் பகுதியில் முடியான்சே என்பவர் கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

கொலையாளி யார் என்பது பற்றி எவ்வித செய்தியும் போலீஸாருக்குக் கிடைக்கவில்லை. புலன் விசாரிப்பு நடந்து வருகிறது. [ந-நி]

விஞ்ஞானம் நாச சக்தியா?

பயத்தை போக்குமாறு ராஜாஜி வேண்டுகோள்

வெளிநாட்டு படிப்பு மோகம் வேண்டாம்

கல்கத்தா, டிச. 3

போஸ் சமூகத்தின் 30-வது ஆண்டு விழாவுக்குத் தலைமை வகித்து மேற்கு வங்க கவர்னர் ஸ்ரீ. ஸி. ராஜகோபாலாச்சாரி கூறியதாவது:-

"நாச வேலைக்கே விஞ்ஞானம் பயன்படுத்தப்படும் என்று பாமர மக்கள் பயப்படுகின்றனர். அந்த பயத்தைப் போக்குமாறு விஞ்ஞானிகளைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

அந்த பயம் அதிகரித்தால் ராணுவ செலவுக்கு மென்மேலும் பணம் தேவைப்படும். விஞ்ஞானத்துக்குச் சொற்ப பணமே கிடைக்கும் ஏழைத் தேசமான நமது நாடு அதிக ராணுவ செலவுக்கும் பரந்த விஞ்ஞான ஆராய்ச்சிக்கும் போதுமான வரிப் பணத்தைத் தேட முடியாது.

விஞ்ஞான ஆராய்ச்சியில் ஏராளமான இளைஞர்கள் ஈடுபடவேண்டும். அபோக்கியத்தனத்துக்கோ பாவனைகளுக்கோ அங்கு இடமில்லை. சத்தியத்தை சத்தியத்தின் மூலமே கண்டுபிடிக்க முடியும்.

விவேகமும் விஞ்ஞானமும் பிறந்த நாடு இது. நம நாட்டு நிலம் அதன் வளங்களை எல்லாம் இழந்துவிடவில்லை. நமது தேசத்தில் எவ்வளவோ ஆராய்ச்சிகள் நடக்க இடமிருக்கிறது. ஆகவே விஞ்ஞானப் படிப்புக்காக அந்நிய நாடுகளுக்கு நாம் ஓடவேண்டியதில்லை. திருந்த வயது வந்த பிறகே வெளிநாட்டுக் கல்வியில் ஈடுபட வேண்டும்."

ராஜாஜியின் 70-வது பிறந்த தினம்

சென்னை, டிச. 3

சென்னை ஷெரிப் ஸ்ரீ எஸ். ராமசாமி நாயுடு இல்லத்தில் நடைபெற்ற ஓர் கூட்டத்தில் மேற்கு வங்க கவர்னர் ஸ்ரீ ராஜாஜியின் 70-வது பிறந்த நாளை ஆடம்பரமாக கொண்டாட தீர்மானிக்கப்பட்டது. டிச. 10-ம் தேதியிலிருந்து 16-ம் தேதி வரை ஒரு வார காலத்திற்கு இத்தினம் மிக விமரிசையாக அனுஷ்டிக்கப்படும்.

த. நா. கா. க. தலைவர் ஸ்ரீ கே. காமராஜ நாடார் இக் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். கீழ்க் கண்டவர்களைக் கொண்ட ஓர் கமிட்டி நிறுவப்பட்டது. பரதமர் ஸ்ரீ ஓ. பி. ராமசாமி ரெட்டியார் (தலைவர்) ஸ்ரீமான்கள் காமராஜ் நாடார், எஸ். ராமசாமி நாயுடு [உப தலைவர்கள்] டாக்டர் பு. கிருஷ்ணராவ் ஸ்ரீ ஸி. என். முத்துரங்க முதலியார், ட்ரோஜன் அண்ணாமலை செட்டியார் (பொக்கிஷதாரிகள்) ஸ்ரீமான்கள் எஸ். வெங்கடரமணன், ஆர். கிருஷ்ணமூர்த்தி (கல்கி) என். கே. வனுபகம், ஏ. சுப்பையா [காரியதரிசிகள்]

இவர் வாழ்க்கைச் சரித்திரத்தை அச்சிட்டு இவ்விழாவில் சமர்ப்பிக்கவும் தீர்மானிக்கப்பட்டது. இவ்வேலைக்காக சுதேசமித்திரன் ஆசிரியர் ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீனிவாசன், புரொபசர் ஸ்வாமிநாதன், ஸ்ரீ ஆர். நாராயணய்யங்கார் ஆகியோரடங்கிய ஓர் கமிட்டியும் நிறுவப்பட்டது.

சிறையில் இருந்து தப்பி ஓடிய கைது

மோட்டாரில் செல்லக் காணப்பட்டானும்

கொழும்பு, டிச. 5

சிறையில் இருந்து தப்பி ஓடிவிட்ட ஜடசுந்தரமும் இன்னும் இருவரும் ஸி. ஓய். 2918ம் நம்பர் மோட்டார் வானில் சென்றுகொண்டிருக்கக் காணப்பட்டார்கள்.

மேற்படி வான் நுககொடையில் இருந்து ஹைலெவல் ரோட் வழியாக கொழும்புக்குச் சென்றுகொண்டிருந்ததாகத் தெரிகிறது.

இது சம்பந்தமாக எல்லாப் போலீஸ் ஸ்டேஷன்களுக்கும் தகவல் கொடுக்கப்பட்டிருக்கிறது. [ந-நி]

ஹைதராபாத் சர்க்கார்-காங்கிரஸ் சமரச முறிவு

6 மாதத்திற்குள் யுத்தம் மூளும் என்கிறார் அகாலித் தலைவர்

இந்திய ராணுவம் பற்றி பாதுகாப்பு மந்திரி

புதுடில்லி, டிச. 8

ஹைதராபாத்தில் இடைக்கால சர்க்கார் அமைக்க சமஸ்தான காங்கிரசின் ஒத்துழைப்பை பெற சமஸ்தான சர்க்காரால் முடியவில்லை. ஹைதராபாத் மந்திரி பிங்களவெங்கட்டராமரெட்டி இது சம்பந்தமாக சமஸ்தான காங்கிரஸ் தலைவர் சுவாமி ராமானந்ததீர்த்தாவைச் சந்தித்துப் பேசினர். சமஸ்தான காங்கிரஸ் தலைவர் சமஸ்தான சர்க்கார் மக்களுக்கு பூரண பொறுப்பாட்சி வழங்க வேண்டுமென்றும் இந்திய யூனியனில் ஹைதராபாத் சேருவது பற்றி பொதுஜன வாக்கெடுப்பு நடத்தவேண்டுமென்றும் கோருகிறார். சமஸ்தான சர்க்கார் பொதுஜன வாக்கெடுப்பு நடத்த மறுக்கிறார்கள்.

80 லட்சம் அகதிகள்

நவம்பர் 21-ம் தேதிவரை இந்தியாவிலிருந்து பாக்கிஸ்தானுக்கும் பாக்கிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கும் 80 லட்சம் அகதிகள் எல்லையைக் கடந்திருக்கிறார்கள். இதில் 40 லட்சம் ஹிந்து சீக்கிய அகதிகள் மேற்கு பஞ்சாப், வடமேற்கு மாகாணம், சிந்து, பலுசிஸ்தானம் ஆகிய இடங்களிலிருந்து இந்தியாவுக்குக் கடத்தப்பட்டனர். இன்னும் மேற்கு பஞ்சாபிலும் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திலும், ஐந்தாறு லட்சம் அகதிகளிருக்கிறார்கள். அவர்களும் டிசம்பர் மத்திக்குள் கடத்தப்பட்டுவிடுவார்கள். கிழக்கு பஞ்சாபிலும் டில்லி மாகாணத்திலிருந்தும் 40 லட்சம் முஸ்லிம் அகதிகள் பாக்கிஸ்தானுக்குச் சென்றனர், சகலவிதமான போக்குவரத்து சாதனங்கள் மூலம் [ரயில், மோட்டார் லொறி, விமானம், கப்பல்] தினம் அரைலட்சம் அகதிகள் பாக்கிஸ்தானிலிருந்து இந்தியாவுக்குக்கொண்டுவரப்பட்டனர்.

இன்று அகாலி சீக்கிய தலைவர் தாராசிங் பத்திரிகா நிருபர்கள் கூட்டத்தில் பேசியபோது, இந்தியா வந்த ஹிந்து சீக்கிய அகதிகளை பாக்கிஸ்தானுக்குத் திரும்பச் செல்லும்படி தூண்டலாகாதென்றும், அவர்கள் பலவந்தத்தால் வெளியேறியதால் அவர்கள் பாக்கிஸ்தானில் விட்டு வந்த நிலபுலன்களின் கிரயத்தை பாக்கிஸ்தான் கொடுக்க வேண்டுமென்றும், பஞ்சாபிகள் ஐக்கிய மாகாணத்தில் பிரவேசிப்பதைத் தடுத்திருப்பதைக் கண்டித்தும், அடுத்த 6 மாதத்தில் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் யுத்தம் மூளுமென்றும் தெரிவித்தார்.

காஷ்மீர் போர்

காஷ்மீர் போர் நிலையில் சென்ற 24 மணி நேரத்தில் மாறுதல் எதுவுமில்லை.

சைன்யம் விரைவில் தேசிய மயமாகும்

புதுடில்லி, டிச. 4

தேச பாதுகாப்பில் மட்டுமின்றி கிழக்கு பஞ்சாபில் நிர்வாக நெருக்கடியை சமாளிப்பதிலும் இந்தியத் துருப்புகள் செய்துள்ள அரிய சேவையை பாதுகாப்பு மந்திரி ஸர்தார் பலதேவ் சிங் ரேடியோமூலம் பாராட்டினர். கிழக்கு பஞ்சாபிலும் காஷ்மீரிலும் காண்பித்த உறுதியைப் போற்றினர். காஷ்மீரில் மலைப்பகுதியில் தம் பணியை நமது துருப்புகள் திறம்படச் செய்து முடிக்குமெனத் தாம் நம்புவதாக அவர் தெரிவித்தார்.

உள்நாட்டு விவகாரங்களால் சைன்யம் பூராவையும் இந்தியமயமாக்கும் வேலை தாமதப்படுவதாகவும் எனினும் உறுதியுடன் இக்கொள்கை நிறைவேற்றி வைக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார். சைன்யம் பூராவும் இந்தியா சர்க்காரின் கீழிருப்பதாகவும் இன்னும் சிறிது காலத்துக்கு சில பிரிட்டிஷ் அதிகாரிகளை வைத்துக் கொள்ள வேண்டியிருக்குமென்றும் அவர் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் அதிகாரிகள் சூழ்ச்சி

புதுடில்லி, டிச. 4

இந்திய சைன்யத்துக்குச் சொந்தமான பல நல்ல விமானங்களை 'லாயக்கற்றவை' என கழித்துவிட்டு 'காயலாங்கடை' விலைக்கு விற்க ராணுவ கழிவுச் சரக்கு விற்பனை பொறுப்பாளரான பிரிட்டிஷ் அதிகாரிகள் சூழ்ச்சி செய்தார்கள். ஆனால் இது பலிக்கவில்லை.

ரூ 4000 முதல் 5000 வரை விலை சொல்லி இவற்றை கடத்தி விட திட்டம் போட்டிருந்தனர்.

சமயத்தில் இந்தியா சர்க்கார் கண் விழித்துக்கொண்டனர். இத்தகைய 89 விமானங்கள் மீட்கப்பட்டு இப்பொழுது முதன்மையாக வேலை செய்கின்றன.

இதற்கு ஜவாப்தாரிகளான பிரிட்டிஷாரில் பலர் சுதந்திர தினத்துக்குப் பின் கம்பி நீட்டிவிட்டார்கள்.

இத் தகவலை மந்திரி ஸ்ரீ சியாம்பிரஸாத முகர்ஜீ நேற்று இந்தியா பார்லிமெண்டில் அறிவித்தார்.

298 கோடி ரூபாய் போட்டு வாங்கின ராணுவச் சரக்கு 100 கோடி ரூபாய்க்கு கொடுக்கப்பட்டுவிட்டது. இன்னும் 165 கோடி பெறுமான சரக்கு பாக்கி.

2 உருக்கு தொழிற்சாலைகளை இந்தியசர்க்கார ஸ்தாபிப்பர்

புதுடில்லி, டிச. 4

ஒவ்வொன்றிலும் 5 லக்ஷம் டன் உருக்கு தயாரிக்கக்கூடிய இரண்டு தொழிற்சாலைகளை பீஹாரில் ஒன்றும் மத்திய மாகாணத்தில் ஒன்றுமாக அமைக்க இந்தியா சர்க்கார் உத்தேசித்துள்ளனர்.

டில்லியில் புதுக்கோட்டை தூதுகோஷ்டி

புதுடில்லி, டிச. 3

புதுக்கோட்டை சமஸ்தான காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ. வி. கிருஷ்ண மூர்த்தி ஐயர், காரியதரிசி ஸ்ரீ வல்லத்தரசு ஆகியவர்களையும், இதர நால்வரையும் கொண்ட புதுக்கோட்டை சமஸ்தான காங்கிரஸ் தூதுகோஷ்டி புதுடில்லி வந்து சேர்ந்திருக்கிறது. டாக்டர் பட்டாபி சீதாராமையாவும், ஸ்ரீ சங்கர்ராவ்தேவையும் தூதுகோஷ்டியினர் இன்று சந்தித்தனர்.

ஸர்தார் வல்லாபாய்படேலையும், சமஸ்தான இலாகா மந்திரிகளையும் நாளை சந்தித்து, சமஸ்தான சீர்திருத்த விஷயங்களை தூதுகோஷ்டி விவாதிக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

சமஸ்தான சர்க்கார் சார்பில் உணவு மந்திரி ஸ்ரீ. பாலகிருஷ்ணனும் இங்குவந்து சேர்ந்துள்ளார்.

இந்தோனேஷிய தகராறு

பட்டேவியா, டிச. 5

பட்டேவியா துறைமுகத்தில் நிற்கும் அமெரிக்க யுத்தக் கப்பலில் டச்சு கமிட்டியும் இந்தோனேஷியா கமிட்டியும் பாதுகாப்பு சபையின் மூவர் கமிஷனும் கூடி சமரசப் பேச்சுகள் நடத்தின. யுத்த நிறுத்தம்பற்றிய சமரசப் பேச்சு இன்னும் தாமதிக்கப்படுகிறது. அதன் பிறகு அரசியல் சமரசப்பேச்சு நடத்த வேண்டும்.

மலேயா சமஷ்டி அரசியல்

ஜனுவரியில் ஏற்படும்

லண்டன், டிச 3

மலேயாவில் புதிய சமஷ்டி அரசாங்கம் ஜனுவரி மாதம் முதல் தேதி ஏற்பட்டுவிடுமென்று இன்று காமன்ஸ் சபையில் குடியேற்றநாட்டு மந்திரி அறிவித்தார். மலேயா சமஸ்தான மன்னர்களுடனும் ஐக்கிய மலேயா தேசிய ஸ்தாபனத்துடனும் கலந்து பேசி திட்டம் அமைக்கப்பட்டுள்ளதென்று கூறினர்.

இடது சாரிகளின் ஐக்கிய முன்னணி

யூ. என். பி. யை முறியடிக்க ஏற்பாடு

கொழும்பு, டிச. 4

நேற்றுமாலை கால்பேஸ் மைதானத்தில் போல்ஷவிக் லெனினிஸ்ட் கட்சியின் ஆதரவில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. கட்சிக் காரியதரிசி திரு பெர்னாட் சொய்சா பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

யூ. என். பி. யை முறியடிக்க போல்ஷவிக் லெனினிஸ்ட் கட்சி, கமியூனிஸ்டு கட்சி, சமசமாஜக் கட்சி ஆகியவைகள் சேர்ந்து இடது சாரிகளின் ஐக்கிய முன்னணியை நிறுவவேண்டும். பாராளுமன்றத்தின் மூலம் நாட்டுக்கு உண்மையான சுதந்திரத்தைப் பெற முடியாது. அதற்கு வெளியேயும் சுதந்திரப் போராட்டம் நடத்த மக்களைத் தயார் செய்ய வேண்டும். யூ. என். பி க்கள் பொதுத் தேர்தலில் நியாயமான முறையில் வெற்றிபெறவில்லை. மதத்திற்கு ஆபத்து என்ற கூச்சலையும் கமியூனிஸத்தால் ஆபத்து என்ற பீதியைக் கிளப்பியும் வெற்றி பெற்றது. திரு அத்தர ஐ. திரு எட்மண்ட் சமரக்கொடி, திரு ஜேக் கொத்தலவல முதலியோர் பேசினர்கள். பாது காப்பு ஒப்பந்தத்தின் மூலம் யூ. என். பி அரசாங்கம் பொது மக்கள் சுதந்திரப் போராட்டத்தை பிரிட்டிஷ் ராணுவத்தைக் கொண்டு நசுக்குவார்கள் என்று திரு கொத்தலாவல தெரிவித்தார்.

உணவு வாங்க பிரிட்டனிடம் பணமில்லை

ஒட்டாவா, டிச. 4

பிரிட்டனுக்கும் கானடாவுக்குமிடையில உணவு ஒப்பந்த சம்பந்தமாகத் தற்போது நடக்கும் சம்பாஷணையில் பண விஷயத்தில் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறதாக ஜே கார்டினர் என்னும் விவசாய மந்திரி இங்கே நேற்றிரவு கூறினர்.

1948ல் பிரிட்டன் கானடாவிடம் வாங்கும் உணவுக்கு எதை பணமாக உபயோகிக்கப் போகிறார்கள் என்று தனக்கு விளங்கவில்லையென்றும் மற்ற தேசத்தவர் தங்களுக்குக் கருணை காட்டி தங்கள் உணவுப் பொருட்களை வாங்கும்படியும் பிறரை வாங்கப்பண்ணும்படியும் கேட்டுக் கொண்டார்.

ருமேனியா மன்னர் விவாகச் செய்தி

தாயாரின் மறுப்பு

லாசேன், டிச 3

பர்பன் பர்மா இளவரசி அன்னியை ருமேனியா மன்னர் மைக்கேல் விவாகம் செய்வார் என்று வெளியான விவாகச் செய்தியை மன்னரின் தாயாரான மகாராணி ஹெலன் மறுத்தார். லண்டனில் எனது மகன் எனது உறவினர் டலரைச் சந்தித்தார் என்றும் இளவரசி அன்னியை தங்களுடன் அழைத்து வந்ததாகவும், சில தினங்களில் அன்னி இளவரசி தயாரான டென்மார்க் இளவரசி மார்கரட் தங்களுடன் வந்து சேருவார் என்றும் 10 வருட காலத்தில் இப்பொழுதுதான் தன் மகன் வெளியே சென்று வாலிபர்களுடன் பழகுகிறார் என்றும் தெரிவித்தார். [ராய்ட்டர்]

போர்ச்சுக்கல் கரையில் பெரும் புயல்

150 பேர் காணப்படவில்லை

லிஸ்பன், டிச. 5

ஓபோர்ட்டோ என்னுமிடத்துக்கருகில் டூரோ நதி கடலில் விழுமிடத்தில் பெரும் புயலின் காரணமாக ஐந்து போர்த்துக்கேய கப்பல்கள் உடைந்து 150 பேர் இறந்து கண்டுபிடிக்கப்படாமலிருப்பதாக உத்தியோகத்தோரணையில் சொல்லப்படுகிறது.

போர்ச்சுக்கல் தேச கடற்கரை நெடுக இப் புயல் அடித்தது. [ராய்ட்டர்]

ஹோலிவுட்டிலிருந்து வேலை நீக்கம்

கமியூனிஸ்டுகளை ஒழிக்க நடவடிக்கை

நியூயார்க் டிச. 3

அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையின் அமெரிக்க விரோதிகளைப்பற்றி விசாரணை செய்யும் கமிட்டி முன்பு தாங்கள் கமியூனிஸ்டுகளா இல்லையா என்பதற்குப் பதில் சொல்ல மறுத்த ஹோலிவுட் சினிமா எழுத்தாளர்களிருவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டனர். மெட்ரோ கோல்டுவின் மேயர் ஸ்டுடியோவில் வேலை செய்து வந்த அவ்விருவர்களின் பெயர்கள் டால்டன் ட்ரம்போ, லெஸ்டர் கோலே. இதற்கு முன் இந்த காரணத்திற்காக ஆர். கே. ஓ. பிக்சரைச் சேர்ந்த டைரக்டர் எட்வர்ட் டிமிட்ரிக், புரட்யூசர் அட்ரியன் ஸ்காட், ட்வென்டியத் செஞ்சுரி பாக்ஸ் பிக்சரைச் சேர்ந்த எழுத்தாளர் ரிங்லார்ண்ட்டர்.

மற்றும் ஐவர் மீதம் கமிட்டி குற்றம் சாட்டியுள்ள அவர்கள் தற்சமயம் எந்த ஸ்டுடியோவிலும் வேலை செய்யவில்லை. (ராய்ட்டர்)

2500 ரூ. பெறுமதியான தேயிலை களவு

ஹட்டன், டிச. 5

ஹட்டனிலுள்ள கே. ஷண்முகலிங்கம் என்னும் வர்த்தகர் கம்பனியிடம் இருந்து ரூபாய் 2500 பெறுமதியான 2803 ருத்தல் தேயிலை களவாடப்பட்டதாக ஓர் புகார் செய்துள்ளார்.

களவாடியது யார் என்பது இதுவரை மர்மமாகவே இருக்கிறது. (ந-நி)

பிரிட்டிஷ் குதிரைப் பந்தயத்தில் ஆகாகான் முதன்மை

இரண்டாவது ஸ்தானம் பரோடா மன்னருக்கு

லண்டன், நவ. 30

இவ்வருட குதிரைப் பந்தயத்தில் ஆகாகானின் குதிரைகளே அதிக வெற்றிகளை ஈட்டியுள்ளது. மொத்தம் 44000 பவுண் இவரது குதிரைகளால் வெற்றிகொள்ளப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஸ்தானத்தை பரோடா மன்னர் பெறுகிறார். அவரது குதிரைகள் 41000 பவுண் வெற்றி பெற்றிருக்கிறது. மூன்றாவது ஸ்தானத்தை ஜோன் டெவார் என்பவர் பெறுகிறார்.

சென்ற வருடம் ஏழாவது ஸ்தானத்தைப் பெற்ற பிரிட்டிஷ் மன்னர் இவ்வருடம் 20-வது ஸ்தானத்தைக்கூட அடையவில்லை.

பிரிட்டிஷ் வர்த்தகமந்திரி ரஷியா பயணம்

லண்டன், டிச. 3

சென்ற ஜூலை மாதம் முறிந்துபோன ரஷியா-பிரிட்டன் வர்த்தக ஒப்பந்தம்பற்றிய சமரசப் பேச்சை மீண்டும் ஆரம்பிக்க வர்த்தக மந்திரி வில்சன் இன்று காலை மாஸ்கோவுக்கு விமானத்தில் பயணமானார்.

ஐக்கியதேச கொரியா கமிஷன்

பாரிஸ், டிச. 4

ஐக்கியதேச ஸ்தாபனத்தின் கொரியா கமிஷனுக்கு திரு பால்பாரட்கர் பிரஞ்சு பிரதிநிதி கோஷ்டித் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கிறார்

ரயில்கள் கவிழ்க்கப் படுகின்றன

கமியூனிஸ்டுகள்-மந்திரிகள் பரஸ்பர குற்றச்சாட்டுகள்

பிரெஞ்சு வேலை நிறுத்த எதிர்ப்பு மசோதா நிறைவேறியது

பாரிஸ், டிச. 4

இன்று பிரெஞ்சு பாராளுமன்றத்தில் வேலை நிறுத்த எதிர்ப்பு மசோதா நிறைவேறியது. சாதகமாக 413 வோட்டுகளும் பாதகமாக 183 வோட்டுகளும் கிடைத்தது. வெகுநேரம் மும்முரமான விவாதங்கள் நடைபெற்ற பிறகு மசோதா நிறைவேறியது.

பாராளுமன்றத்தில் விவாதம் நடைபெறுகையில் கட்டிடத்தைச் சுற்றி பிரெஞ்சு துருப்புகளும் போலீசும் பீரங்கிகள் துப்பாக்கிகள் சகிதம் காவல் புரிந்துகொண்டிருந்தனர். பிரான்ஸில் 12 மணி நேரத்தில் 4 இடங்களில் ரயில்கள் கவிழ்க்கப்பட்டன.

ரயில் பாதைகளை பாரிஸ் பகுதியில் பாதுகாக்கும் ராணுவம் துப்பாக்கிகளைக் கைவிட்டு பீரங்கிகளை நிறுவினர்.

நேற்று மந்திரி சபைக் கூட்டத்தில் 80000 பேர்கொண்ட புதிய படையைத் திரட்டும் ஏற்பாடுகள் ஆலோசிக்கப்பட்டன. இப்படை, நாட்டில் பலாத்காரம், கொலை, சதிச் செயல் இவைகளை அடக்க உபயோகிக்கப்படும்.

ஏதோ ஒரு ராணுவ கட்டளையின்மீது வடபகுதியிலுள்ள சுரங்கத் தொழிலாளர்களிடையே புரட்சியை உண்டாக்க ஒரு கூட்டம் வேலை செய்து வருவதாக உள்நாட்டு மந்திரி அறிவித்தார்.

ஆர்ப்பாட்டங்களில் கைதியாகும் கமியூனிஸ்டுகள் அடையாளம் தெரியாதிருக்கும் பொருட்டு தங்களிடமுள்ள கட்சிச் சின்னத்தை அழித்துவிடும்படி கமியூனிஸ்டு கட்சி உத்தரவிட்டிருக்கிறது.

சென்ற மூன்று வாரங்களாக நாட்டைத் திணறடித்து வரும் வேலை நிறுத்தத்தை ஒடுக்க வேலை நிறுத்த எதிர்ப்பு மசோதா பாராளுமன்றத்தில் 70 மணி நேரம் அமளிதுமளியுடன் விவாதிக்கப்பட்டது. அப்பொழுது வேலை நிறுத்தம்பற்றி பிரபல சோஷலிஸ்ட் அங்கத்தினர் மாக் விளக்கமாகப் பேசினர். இந்த வேலை நிறுத்தம் தொழிலாளர் சம்பளக் கோரிக்கைக்காக நடைபெறவில்லையென்றும் அரசாங்கத்தைக் கவிழ்க்க அரசியல் காரணமாக நடைபெறுகிறதென்றும் தொழிலாளர்கள் இப்பொழுது ஆங்காங்கு வேலைக்குத் திரும்ப ஆரம்பிக்கும் சமயம் புரட்சிச் செயல்கள் ஆரம்பமாயிருக்கின்றனவென்றும் மார்ஷல் திட்டத்தை எதிர்க்கவே இப்புரட்சி வேலைகள் நடைபெறுகின்றனவென்றும், அவர் தெரிவித்தார்.

பிரெஞ்சு கமியூனிஸ்ட் கட்சி காரியதரிசி தோரஸ மாஸ்கோ சென்று சமீபத்தில் திரும்பினர் என்றும் அவருக்கு இவ்வேலை நிறுத்தம்பற்றிய மர்மம் தெரியுமென்றும் கூறினர்.

சதிகாரர்கள் ரயிலைக்கவிழ்த்ததால் 7 பேர் மாண்டனர் என்று நிதி மந்திரி பாராளுமன்றத்தில் தெரிவித்தபோது அரசாங்கம் கொலைகாரர்களாகிவிட்டார்கள் என்று கமியூனிஸ்ட் அங்கத்தினர்கள் குற்றஞ்சாட்டினர்.

இரவு முழுதும் விவாதம் நடந்ததால் பல அங்கத்தினர் தூங்கி விழுந்துகொண்டிருக்கையில நிதி மந்திரி வந்து ரயில்கள் கவிழ்க்கப்பட்ட செய்தியை அறிவித்தார். கமியூனிஸ்ட் புரட்சிக்காரர்தான் இதற்குக் காரணம் என்று அவர் கூறியதும் உடனே கமியூனிஸ்டு அங்கத்தினர்கள் ஆத்திரங்கொண்டு "நீங்கள் தான கொலையாளிகள்" என்று கோஷித்தனர்.

கலேயிலிருந்து டென்மார்க் சென்ற ரயில கவிழ்க்கப்பட்டது. இது 5 வது சம்பவமாகும். அரசாங்கமும் டிகால் கட்சியாருந்தான் இதற்குக் காரணமென்றும் கமியூனிஸ்டுகள் மீது பழி சுமத்தவே அவர்களால் இச்செயல்கள் நடக்கின்றனவென்றும் கமியூனிஸ்டு அங்கத்தினர்கள் பாராளுமன்றத்தில் தெரிவித்தனர். [ராய்ட்டர்]

தீவுப்பகுதிகளின் அபிவிருத்தி!

தேர்தலுக்கு முன் ஆசை காட்டி தேர்தலுக்குப்பின் ஏமாற்றிவிட்டனர்!

யூ. என். பி. அரசாங்கத்தின் விபரீதப்போக்கு

(நமது ஊர்காவற்றுறை நிருபர்)

பாராளுமன்றத் தேர்தல் சமீபித்தது முதல் முடுக்குகளெல்லாம் பாடசாலைத் திறப்பு, ஆஸ்பத்திரி திறப்பு, டெலிபோன் இணைப்பு, பாலங்கள், தெருக்கள் புதுப்பித்தல் முதலிய பல வித வேலைகளில் மந்திரிமாரும் ஏனைய அதிகாரிகளும் மிகவும் ஊக்கமாக ஓடித்திரிந்தனர். கல்வி மந்திரி, சுகாதார மந்திரி, கைத்தொழில் மந்திரி, போக்குவரத்து மந்திரி ஆகியோர் தீவு பகுதிகளை பார்வையிடுவதாகப் பலபிரசுரங்கள் வெளியாயின: உண்மையில் கல்வி மந்திரி, சுகாதார மந்திரி ஆகியோர் பல தீவுகளைத் தரிசித்துச் சென்றனர். புங்குடுதீவில் ஓர் தமிழ்ப் பாடசாலை ஒன்று அரசினர் பொறுப்பில் உண்டாக்குவதாகக் கூறியபோது ஜனங்கள் காணியும் கட்டிடமும் இலவசமாக உதவினார். ஆகஸ்டு மாதம் 23-ம் தேதி வரையும் அதிகாரிகள் வெகு சிரத்தை யெடுப்பதுபோல் நடித்தனர். 23-ம்தேதி முடிந்ததும் பாடசாலை திறக்க முடியாத நிலையிலிருக்கிறது. இன்னும் திறபடவில்லை. அதிகாரிகள் கூறும் சாட்டு என்னவென்றால், தளவாடம். கட்டிடம் கிணறு முதலியன அரசாங்கியாரின் பிரமாணங்களுக்கமைய இருந்தாலன்றி அரசினர் பாடசாலையை ஏற்கமாட்டார்களாம். தெரிவு நடைபெற முன்னர் காணியும் தற்காலிக கட்டிடமும் உதவப்பட்டால் பாடசாலை திறக்க முன்வந்த அதிகாரிகள் இப்போது இவ்வாறு கூறுவது மிகவும் விந்தையே! நெடுந்தீவிற்கு ஆகாயத் தந்தி இணைப்பு உண்டாக்க வேண்டுமென்று தபால் பகுதி அதிகாரிகள் நடவடிக்கையெடுத்தபொழுது யுத்தம் காரணமாக நிறுத்தப்பட்டிருந்தது. பின்னர் சென்ற ஜூன், ஜூலை மாதத்தில் ஆகாயத்தந்தி இணைப்புக்கு கருவிகள் எல்லாம் தயாராகி பரீட்சார்த்தமும் நடைபெற்றது. திறப்பு விழாவிற்கு தினமும் நிச்சயிக்கப்பட்டது. ஆயின் 23-ம் தேதி முடிந்ததும் யாவும் கைவிடப்பட்டு விட்டது. அனலை தீவில் டிஸ்பென்சரி ஒன்று உண்டாக்கித் தருவதாகக் கூறி மருத்துவ அறைக்கு அத்திவாரக்கல் இட்டுச் சென்றார் மந்திரி. ஆனால் டிஸ்பென்சரி இன்றுவரையுமே உண்டாக்கப்படவில்லை. நயினா தீவில் பாலமுகப்பை நீட்டித் தெருவாக்கும் வேலை அரைகுறையில் இன்னும் முற்றுப் பெறாதிருக்கிறது. ஊர்காவற்றுறையின் பாலம் உடைக்கப்பட்டு ஒரு வருடமாகியும் வேலை முற்றுப் பெறவில்லை. என்ன காரணம் என விசாரிக்கின் சிமெந்து கைவசமில்லையாம்.

இது மட்டுமா யூ. என். பி அரசாங்கத்தாரின் சதி: ஐரோப்பிய அதிகாரிகள் கூட்டுறவுப் பதிவு காரியஸ்தர்களாயிருக்கும்பொழுது தீவு வாசிகளின் போக்குவரவுக் கஷ்டத்தை நீக்குவதற்காக ஓர் ஐக்கிய மோட்டார் படகுச் சங்கத்தை 1933ம் ஆண்டில் புங்குடுதீவு, நயினா தீவு, அனலை தீவு எழுவை தீவு வாசிகளை அங்கத்தவர்களாகக் கொண்டு பதிவு செய்தார்கள். அவர்களின் உதவியினால் 1933ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22-ம் தேதி படகுச் சேவை ஆரம்பித்து திறம்பட நடத்தி வந்தார்கள். அவர்களின் ஞாபகார்த்தமாக வள்ளங்களுக்கு கமால் நாகபூஷணி என்னும் பெயரும் சூட்டி வைத்தார்கள். இச் சேவையை விஸ்தரிக்க வேண்டுமென்று சென்ற ஆண்டில் யூ என். பி அதிகாரிகள் எல்லையைக் கூட்டி ஊர்காவற்றுறை, அடுத்த தீவுகளையும் இணைத்து ஊர்காவற்றுறை அயக்கத்தையும் எடுக்கும்படி தூண்டி எழுப்பித்தனர். அனால் ஆகஸ்டு மாதம் 23-ம் தேதி வரையும் பொறுத்திருந்துவிட்டு செப்டம்பர் மாதம் 8-ம் தேதி புதிய காரியஸ்தர் சமது விசேட அதிகாரங்களைக் கொண்டு பதிவை அழித்து சங்கத்தைக் குலைத்து விட்டார். இப்பொழுது கூட்டுறவுச் சங்க 'மோட்டார், வள்ளப்' போக்குவரவு நிறுத்தப்பட்டு விட்டது. ஆயின் அங்கத்தவர்கள் மந்திரியாருக்கு மனுச் செய்திருக்கிறார்கள்.

சென்ற 14 வருடம் சிறப்புடனே பெற்ற ஓர் ஸ்தாபனம் அழிக்கப்பட்ட விந்தை இத்தீவுவாசிகட்கு ஓர் பெரிய ஆச்சரியமும் மனவருத்தமுமான காரியமாயிருக்கின்றது.

முசோலினியின் படைத் தலைவன்மேல் வழக்கு

விசாரணை ஒத்திவைக்கப் பட்டது

ரோம் டிச 3

வட இத்தாலியிலே முசோலினியின் படைகளுக்குத் தலைவராயிருந்த மார்ஷல் ரடொல்போ கிரஸியானி என்பவர்மேல் ஜெர்மன் காரரோடு உடந்தையாயிருந்தார் என்ற குற்றச்சாட்டு வழக்கு விசாரணைக்கு இன்று துவங்கவே எடுபட்டு அவர் கோர்ட்டில் ஆஜராகாதபடியால் டிசம்பர் 9-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

கிரஸியானி இப்போ நோய்வாய்ப்பட்டு நேப்பிள்ஸ் என்னுமிடத்தில் ஆஸ்பத்திரியிலிருக்கிறார். இவருக்கு வயது 65. [ராய்ட்டர்]



கதம்பக் கச்சேரி!

சங்கீதம்! —:O:— நாட்டியம்!

கொக்குவில் இந்துக்கல்லூரி கட்டிட நிதிக்காக நேத்தாஜி சுபாஷ சந்த்ர போஸின் தேசிய இந்திய ராணுவப் படையின் மாதர் பகுதிக் காரியதரிசியாயிருந்த

மலாயன் ரேடியோ புகழ்

குமாரி S. N. சரஸ்வதி அவர்களால்

இனிய சங்கீத இசைவிருந்தும், அவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட கல்லூரி மாணவிகளால் பரதநாட்டியக் கச்சேரிகளும்,

1947 டிசம்பர் மீ 6வ சனிக்கிழமை பின்னேரம் 6-30 மணி முதல்
வெள்ளவத்தை அர்ச். பீற்றர்ஸ கல்லூரி மண்டபத்திலும்
1947 டிசம்பர் மீ 8வ திங்கட்கிழமை பின்னேரம் 6-30 மணி முதல்
கொழும்பு நகரசபை மண்டபத்திலும் நடைபெறும்.

பிரவேச விகிதம்:-
பிரத்தியேக ஆசனம் ரூ. 5 00 முதல் வகுப்பு ரூ. 3-00
இரண்டாம் வகுப்பு ரூ. 2-00

அடியிற்கண்ட இடங்களிலும் டிக்கற் பெற்றுக்கொள்ளலாம்:-
[illegible] 99, மெயின் ஸ்ரீட், கொழும்பு.
எஸ். ஞானம் அன் ஸன்ஸ் செட்டியார் தெரு கொழும்பு

கொள்ளை லாபக் காரருக்குக் கொண்டாட்டம்

புதிய வரிகளைத் தழுவி பழைய சரக்குகள் விற்பனை

இருப்புச் சரக்குகள் மீதும் புதிய வரிகள் விதிக்கப்படுமா?

கொழும்பு, டிச. 4

வரி உயர்வைச் சாக்கிட்டு புதிய வரிகள் விதிக்கப்படாத பழைய சரக்குகள் வைத்திருக்கும் வியாபாரிகள் பலர் இதுதான் சரியான சந்தர்ப்பமென்று கொள்ளை லாபமடித்து வருகிறார்கள். ஆதலால் பழைய சரக்குகளின் இருப்பின் மீதும் புதிய வரிகள் விதிக்கப்படுவது பற்றி நிதி மந்திரி ஆலோசித்து வருகிறதாகத் தெரிகிறது. ஆனால் கொள்ளை லாபமடிப்பவர்களைக் கட்டுப்படுத்த அரசாங்கத்தால் முடியாத நிலைமை இப்பொழுது இருந்து வருகிறது. புதிய வரிகளின் காரணமாக இந்த வருடக் கிறிஸ்மஸ் கொண்டாட்டம் ஜனங்களுக்கு அதிகமான செலவை ஏற்படுத்தும். அரசாங்கத்தின் புதிய வரவு செலவுத் திட்டமானது பொன் முட்டைக்கு ஆசைப்பட்டவன் வாத்தைக் கொன்ற கதையாக முடியுமென்று அநேக பெரிய வர்த்தகர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். உதாரணமாக செயற்கைப் பட்டுப் புடவை இதுவரை 25 ரூபாயாக இருந்தது. இனி புதிய வரிகளின்படி 55 ரூபாய்க்குவிற்கப்படும். ஆகவே அநேகர் இவ்வளவு அதிக விலைக்குப் புடவை வாங்கப் போவதில்லை. இதன் பயன் என்னவாகுமெனில் இப்பொழுது இதன்மூலம் கிடைக்கும் வரி வருவாயை அரசாங்கம் இழக்கும், அது மட்டுமல்ல இந்தியாவிலிருந்து செயற்கைப் பட்டை திருட்டுத்தனமாகக் கொண்டு வந்து இலங்கையில் விற்கும் திருட்டு வர்த்தகமும் அதிகரிக்கும். இலங்கையில் யாத்திரீகர்கள் இதுவரை சாமான்களை ஏராளமாக வாங்கியதால் வர்த்தகம் செழிப்பாக இருந்தது. அவர்கள் இனி இலங்கையைவிட்டு இந்தியாவில் வாங்கவே விரும்புவார்கள். பட்டாடை அணிய ஆசைகொள்ளும் பெண்கள் முக்கியமாக மணப் பெண்கள் விமானத்தில் இந்தியாவுக்குச் சென்று அநேக பட்டுப் புடவைகளை வாங்கி உபயோகித்த புடவைகளைப் போலாக்கி இலங்கைக்குக் கொண்டுவர விரும்புவார்கள்.

களவு வழக்கில் எதிரிகள் விடுதலை

திரிகோணமலை, நவ. 28

திரிகோணமலையில் என். யாட்டுக்குச் சொந்தமான 1365 ரூபாய் பெறுமதியுள்ள பித்தளைப் பொருட்களைக் களவாடியதாக கணபதிப்பிள்ளை, மாட்டீன், தனவானசா, புகாரி, எஸ. நாடார், சமரகோன், சிங்கராசா ஆகியவர்கள் மீது பொலீசாரால் தொடரப்பட்ட வழக்கு இன்று திரிகோணமலைக் கோர்ட்டில் திரு என். கிஷணதாசன் அவர்களால் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டு பலர் சாட்சியம் அளித்த பின் நீதிபதி எதிரிகளைவிடுதலை செய்தார். (ந-நி)

லொறி விபத்தில் ஒருவர் மரணம்

பாணந்துறை, டிச. 3

பாணந்துறை 5-ம் குறுக்குத் தெருவில் ஒரு மோட்டார் லொறியும் ஒரு மோட்டார் சைக்கிளும் மோதிக்கொண்டன. இதன் பயனாக சைக்கிளில் சவாரிசெய்துகொண்டிருந்த எச். அப்ரஹாம் பெரேரா என்பவர் காயங்களுக்காளாகி ஆஸபத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கே சற்று நேரம் கழித்து மாண்டார்.

இறந்துபோன திரு. பெரேரா இங்குள்ள கூட்டுறவு மொத்த விற்பனைச் சாலை மானேஜராவர். மேற்படி சம்பவத் தொடர்பாக லொறி டிரைவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

சாராயக் கிராக்கியைச் சமாளிக்க முடியும்

போதிய சாராயம் இருக்கிறதாம்

அந்நிய நாட்டுக் குடிவகைகள் விலை ஏற்றத்தின் எதிரொலி

கொழும்பு, டிச. 3

அந்நிய நாட்டுக் குடிவகைகளின் விலை ஏற்றத்தால் சாராயத்திற்கு அதிக கிராக்கி ஏற்படும் என்று எண்ணப்படுகிறது. இக்கிராக்கியைச் சமாளிக்கப் போதுமான சாராயம் கைவசம் இருப்பதாக கலால் உதவி அதிகாரி நிக்கொலஸ இன்று கூறியுள்ளதாகத் தெரிகிறது. ஆனால் மிக உயர்ந்த ரகம் கிடைக்காதென்றும் மட்டரக சாராயமே பெருவாரியாக இருப்பதாகவும் தெரியவருகிறது.

நேற்று மத்தியானம் தொடக்கமாக அந்நிய நாட்டுக் குடிவகைகள் விலை,ஒன்றுக்குஇரண்டாக ஏறியுள்ளது.

	பழையவிலை	புதியவிலை
விஸ்கி	16-40	30-20
பிராண்டி-(உயர் ரகம்)	21-00	33 75
ஜின்	19-00	34-75
ஸ்நாப்ஸ்	20-00	34 75

விலை ஏற்றத்தின் காரணமாக இவற்றின் விற்பனை மந்தமடைந்து விட்டது.

கொழும்பிலே ஒரு ஸ்டோரில் மட்டுமே 8000 பெட்டி அந்நிய குடிவகைகள் இருப்பதாகவும், புதிய விலையின்படி விற்கும் பட்சத்தில் 12 லட்சம் ரூபாய் அதிக லாபம் உண்டாகும் என்றும் கணக்கிடப்படுகிறது.

அச்சுவேலியில் கிராம முன்னேற்றச் சங்கம்

அச்சுவேலி. நவ. 29

அச்சுவேலி கிராம முன்னேற்றச் சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று திரு தம்பி முத்து அவர்கள் தலைமையில் கிராமச் சங்க மண்டபத்திற் கூடியது.

தலைவர் அவர்கள் சங்கத்தின் லட்சியங்கள் பற்றியும் அதன் முன்னேற்றத்திற்கு அரசாங்கம் செய்ய முன்வந்திருக்கும் பல உதவிகள் பற்றியும்கிராமச் சங்கத்துடன் அது இணைந்து எவ்விதம் ஒத்துழைக்கும் என்பதுபற்றியும்எடுத்துக்கூறினார்.

இச்சங்கச் சார்பில் அச்சுவேலி கிராமத்தில் விளையாட்டிடம் நெசவுசாலை முதலியன ஸதாபிக்கப்படவிருக்கின்றன வென்றும் அரசாங்கம் "ரேடியோ" ஒன்று இலவசமாய் வழங்குவதாக அறிவித்திருக்கிறதென்றும் எம். வைத்தியலிங்கம் அவர்களால் சபையோருக்கு எடுத்துக்கூறப்பட்டது.

பின்னர் புதுவருடத்திற்குரிய நிர்வாக சபை தெரிவுசெய்யப்பட்டது. டி. தம்பிமுத்து தலைவராகவும் எஸ. கணபதிப்பிள்ளை காரியதரிசியாகவும் பி. நமசிவாயம் தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர் (ந-நி)

சீனவுக்கு ஜப்பானிய இயந்திரங்கள் யுத்த நஷ்டஈடு

நாங்கிங், டிச. 2

ஜப்பானிலிருந்து சைனவுக்குக் கிடைக்கக் கூடிய யுத்த நஷ்ட ஈட்டில் இயந்திரங்களும் ஓர் பகுதி. இவற்றைக் கழட்டிச் சைனவுக்கு கொண்டு வந்து சேர்க்கும் சபையார் இன்று ஷாங்கை வந்து சேர்ந்தனர்.

இவற்றின் பெறுமதி 2 கோடி அமெரிக்க டாலர் இவை வந்து சேர்ந்தவுடன் தங்களுடைய சீர்குலைந்த தொழில் நிலையங்களையெல்லாம் திருத்தியமைக்கலாமென சீன வெளிநாட்டு மந்திரியாகிய டாக்டர் உ வாங் சீ சீயே நம்புகிறார். இந்த இயந்திரங்கள் கழற்றப்பட்டு ஜப்பானிய துறைகளில் ஏற்றுமதிக்கு காத்திருக்கின்றன. இந்த மாத நடுப்பகுதியிலிவற்றைக் கொண்டு வந்து சேர்க்க இரு கப்பல்களும் தயாராக இருக்கின்றன. (ராய்ட்டர்)

அணுச்சக்தி சம்பந்தமாக 250 கோடி டாலர் செலவு

புதிய அணுச் சக்தி ஆயுதங்கள் செய்யப் படுகின்றனவாம்

அட்லாண்டிக்நகரம், டிச. 2

அமெரிக்க அணுச் சக்தி கமிஷனின் தலைவர் யூரேனியம் 1 புளுட்டோனியம் என்னும் உலோகங்களில் இருந்து அமெரிக்கா புதிய அணுச்சக்தி ஆயுதங்களைத் தயாரித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

முதலாவது அணுக் குண்டு தயாரிக்கப்பட்ட இடத்திலேயே இவ் ஆயுதங்களும் தயாரிக்கப்படுகின்றன.

பொதுவாக அமெரிக்க அணுச்சக்தி சம்பந்தமாக 250 கோடி டாலர்கள் இதுவரை செலவிட்டிருக்கிறது இன்னும் சில வருடங்களில் இது 500 கோடி டாலராகிவிடும் எனவும் அவர் தெரிவிததார். [ராய்ட்டர்]

அமிதலாப வரி செலுத்த வில்லை

பஸ்கள் கைப்பற்றப் பட்டன

நூரேலியா. டிச 2

நுரேலியா-நானுஓயா-ராகலை பாதைகளில் ஓடிக்கொண்டிருந்த பஸ்கள் நேற்று மாலை திடீரென நின்று விட்டன. ராகலையிலும் நானுஓயாவிலுமிருந்து நுரேலியாவுக்கு வழக்கமாக 'சீசன்டிக்கட்' எடுத்துச் சென்றுகொண்டிருந்த 75 மாணவர்கள் வீடு திரும்ப முடியாது திண்டாடும்படியாயிற்று. காரணமென்னவென்று விசாரித்தபோது இப்பாதைகளில் பஸகள் ஓட்டும் கம்பெனி 1944-46வது வருடத்திற்கு அரசாங்கத்துக்குச் செலுத்த வேண்டிய 69,000 ரூபாய் செலுத்தாதபடியால் அந்த பஸகளை அரசாங்கம் கோர்ட்மூலம் கைப்பற்றியதாகத் தெரிகிறது. வருமானவரி கமிஷனர் அனுமதியின்பேரில் மாணவர்களையும் தபால்களையும் - ஏற்றிச் செல்ல இரண்டு பஸகள் விடப்பட்டன.

சமாதான உடன்படிக்கைகள்

நான்கு வல்லரசுகள் மகாநாடு

லண்டன், டிச. 3

ஜெர்மன் சமாதான உடன்படிக்கை சம்பந்தமாக நேற்று கூடிய நான்கு வல்லரசுகளின் அந்நிய நாட்டு மந்திரிகள் மகாநாட்டில் பல விஷயங்களில் சோவியத் ரஷியாவுக்கும் மற்ற மூன்று வல்லரசுகளுக்குமிடையே அபிப்பிராய பேதமேற்பட்டுள்ளன.

நான்கு வல்லரசுகளின் அந்நியநாட்டு உதவி மந்திரிகள் மகாநாடு ஆஸதிரிய சமாதான உடன்படிக்கை சம்பந்தமாக தயாரித்த அறிக்கையை நேற்று அந்நியநாட்டு மந்திரிகள் மகாநாட்டுக்கு சமர்ப்பித்தது.

ஜெர்மன் உடன்படிக்கை சம்பந்தமாக மகாநாட்டில் முட்டுக்கட்டை ஏற்பட்டால் ஜப்பான் உடன்படிக்கை சம்பந்தமாக பலன்பெறுவதற்காக ரஷியா ஜப்பான் உடன்படிக்கை சம்பந்தமாக விவாதிக்க ஜனவரி 10-ம் தேதி அந்நியநாட்டு மந்திரிகளின் மகாநாட்டைக் கூட்டவேண்டுமென்று கோரியது.

இதுசம்பந்தமாக ரஷியாவும் சைனவும் பிரிட்டனுக்குஅனுப்பியுள்ள கடிதங்களுக்கு பிரிட்டன் இன்னும் பதிலளிக்காமல் அமெரிக்காவுடன் கலந்து பேசி வருகிறது. (ராய்ட்டர்)

இன்னிசைச் சொற்பொழிவு

அச்சுவேலி, நவ. 29

அச்சுவேலி சுதந்திர இளைஞர் கழக சார்பில் இன்று அமெரிக்க மிஷன் பாடசாலை மண்டபத்தில் முத்தமிழ் புலவர் திரு ச. கண்ணன் அடிகளால் "இலக்கியவிருந்து" என்னும் பொருள் பற்றி அரிய சொற்பொழிவொன்று நிகழ்த்தப்பட்டது. கூட்டத்திற்கு நேச மாணிக்கம் அவர்கள் தலைமை வகித்தார். (ந-நி)

ஒரே வகுப்பின் ஆதிக்கம் சிறுபான்மையோருக்கு பாதுகாப்பு மறுப்பு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மானத்தை தமிழ்க் காங்கிரஸ ஆட்சேபித்துள்ளது.

ஐ. நா. ஸ்தாபனத்தில் இலங்கை

இதன் பின் திரு சேனநாயகா தமிழ்க் காங்கிரஸால் சோல்பரி கமிஷன் முன் சமர்ப்பிக்கப்பட்ட மகஜரை வாசித்துக் காட்டினர். இலங்கை இந்திய காங்கிரஸ் பூரண சுதந்திரத்தை விரும்பியது என்றும் ஆனால் இப்பொழுது கிடைத்துள்ள சுதந்திரத்தை அவர்கள் சுதந்திரமாக மதிக்கவில்லையென்றும் ஐ. நா. ஸதாபனத்தில் இலங்கைக்கு அங்கத்துவம் அளிக்கப்பட வேண்டுமென்பதை பண்டித நேருவே கொண்டுவருவார் என தமக்கு திரு வி. வி. கிரி கூறியுள்ளாரென்றும் தெரிவித்துவிட்டு தொடர்ந்து பேசியதாவது:-

டொமினியன் பதத்துக்கு பதிவாக பூரண சுதந்திரம்

எனது கோரிக்கையின் மீதுதான் சுதந்திர மசோதாவிலும் உடன்படிக்கைகளிலும் "டொமினியன்" என்ற பதம் நீக்கப்பட்டுள்ளது. டொமினியன் அந்தஸதென்பது இலங்கைக்கு அந்நியமானதால் அதற்காகவே பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்குள் பூரண சுதந்திர நாடு என குறிக்கும்படி தெரிவித்திருந்தேன். குடியேற்ற நாட்டு மந்திரி இதனை முழுக்க ஆதரித்தார். அதன்படியேதான் டொமினியன் என்ற பதம் நீக்கப்பட்டு பூரண சுதந்திரம் என்ற பதம் சேர்க்கப்பட்டது. இதன் பின் குடியேற்ற நாட்டு மந்திரிஎழுதியகடிதத்தை சபையில் திரு சேனநாயகா படித்தார். அதில்- "ஒப்பந்தங்கள் முடிந்த பின்னர் பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகளுடன் முழுச் சுதந்திரத்தையும் இலங்கை அனுபவிக்குமென்பதை நாங்கள் உங்களது கோரிக்கையின் மீது தெளிவாக்க விரும்புகிறோம்"

தொடர்ந்து அவர் பேசுகையில் பிரிட்டனைத் தவிர வேறு நண்பர்களை இலங்கை பெற முடியாதென்றும் இலங்கை சுதந்திரத்தை அனுபவிக்க தகுதிவாய்ந்ததாக இருப்பதாக கருதப்பட்டதன் மேல்தான் பிரிட்டன்சுதந்திரத்தை அளிக்கமுன் வந்ததென்றும், சுதந்திரத்தைப் பொறுத்த அளவில் மற்ற நாடுகளிலும் பார்க்க திறமையான நிபந்தனைகளுடன் இலங்கை சுதந்திரத்தைப் பெற்றுள்ளதென்றும் ஆகவே இந்த சுதந்திரத்தையிட்டு குதூகலமடைய வேண்டியது தகுதியென்றும் கூறினர்.

முதல் திருத்த தீர்மானம் தோல்வி

சபாநாயகர் திரு ஏ. எப். மொலமுரே முதலாவது திருத்த தீர்மானத்தின் மீது சபையில் வாக்கெடுத்தார். திருத்தத்தை ஆதரித்து 40 வாக்குகளும் ஆட்சேபித்து 59 வாக்குகளும் கிடைத்தன. முதல் திருத்த தீர்மானம் தோல்வியுற்றது.

இரண்டாவது திருத்த தீர்மானம் தோல்வி

இரண்டாது திருத்த தீர்மானத்தின் மீது திரு வி. வன்னியசிங்கமும், திரு டி. இராமலிங்கமும் கொண்டுவந்தது—சபையில் வாக்கெடுக்கப்பட்டது இந்த இரண்டாம் திருத்த தீர்மானத்தை ஆதரித்து 41 வாக்குகளும் தீர்மானத்தை ஆட்சேபித்து 58 வாக்குகளும் கிடைத்தன. இத்தீர்மானமும் தோல்வியுற்றது. இதன் பின் திரு டி எஸ். சேனநாயகாவின் தீர்மானம் சபையில் எடுக்கப்பட்டது. இதன் மீது வாக்கு எடுக்கப்பட்டபோது இதனை ஆதரித்து 59 வாக்குகளும் ஆட்சேபித்து 11 வாக்குகளும் அளிக்கப்பட்டன. இலங்கை சமசமாஜக் கட்சியும் தமிழ்க் காங்கிரஸும், இலங்கை இந்தியன் காங்கிரஸும் வாக்களிக்க மறுத்துவிட்டன. போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சியும் கமியூனிஸ்டு கட்சியும் இந்த தீர்மானத்தை ஆட்சேபித்து வாக்களித்தன. நேரம் 7 மணியானதால் சபை நடவடிக்கையை வெள்ளிக்கிழமை காலை 10மணி வரை சபாநாயகர் ஒத்திவைத்தார்.

ஆசிரியருக்குக் கடிதம்

திரு. தம்பி ஐயாவின் முற்போக்கு

ஐயா!

சென்ற நவம்பர் மாதம் 30-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலையில் கொழும்பு நகர சபை மண்டபத்தில் போலித் தமிழரினால் கூட்டப்பட்ட கூட்டத்திற்கு உண்மைத் தமிழர் கூட்டமாகச் சென்று தமது உரிமையை எடுத்துரைக்க எத்தனிக்கவிடாது தடை செய்தமை காரணமாகத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட மனக்கவலையைச் சமரசமாகத் தீர்த்து வைக்க முன் வந்த வட பகுதி பாராளுமன்ற அங்கத்தவர்களுடன் சுயேச்சைப்பிரதிநிதியான ஊர்காவற்றுறைத்தொகுதி பிரதிநிதி திரு. அல்பிரட் தம்பி ஐயா அவர்கள் வந்து சமரசத்தில பங்குபற்றினர். இது காரணமாக அவரும் உண்மைத் தமிழரின் நலத்தைக் காக்க முன் வந்திருக்கின்றர். இஃது அனைவருக்கும் அடங்கா மகிழ்ச்சி தருகின்றது.

வி. கார்த்திகேசு,
சப்த தீவு வாலிப சஙகக் காரியதரிசி,

இருபிட்டி
புங்குடு தீவு
2-12-47

மாஜி ராணுவத்தினரும் அரசாங்க சேவையும்

விசேஷ சலுகைகள் நீடிப்பு

கொழும்பு, டிச. 3

மாஜி யுத்த வீரர்களுக்கு அரசாங்க சேவைகளுக்காக நடக்கும் தெரிவுகளில் விசேஷ சலுகைகள் வழங்கப்பட்டு வருகின்றனவல்லவா?

அவை காலவரையின்றி நீடிக்கும் எனத்தெரிகிறது.

அமெரிக்க நெவாஜோ இந்தியரிடையே நெருக்கடி

உதவி தர ட்ரூமன் முயற்சி

வாஷிங்டன், டிச. 2

மெக்ஸிக்கோவில் வாடிவரும் நெவாஜோ இந்திய ஜாதியினருக்கு இடைக்கால உதவிகள் செய்வதற்கான ஓர் திட்டத்தை ஜனாதிபதி ட்ரூமன் அமெரிக்க காங்கிரஸில் தாம் சமர்ப்பிக்கப் போவதாகத் தெரிவித்துள்ளார்.

61,000 பேர்கொண்ட ஜாதியினர் மிகக் கொடிய பொருளாதார நெருக்கடியில் சிக்கி இருக்கிறார்கள். [ராய்ட்டர்]

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் வைத்தியரை அணுகத் தேவையில்லை!

புதிய மதுரமான ஆப்பிள் பழங்கள்
கலிபோனியாவிலும், ஆஸ்திரேலியாவிலுமிருந்து
இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.

உங்களுக்கு தேவையானவற்றை எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

கப்பல்கள் வந்தவுடன் துறையிலிருந்து நேரே
எங்கள் பந்தோபஸ்தான அறைகளில்
அவைகளின் புதுமை கெடாது இருக்கும்படி
சேகரிக்கப்படுகின்றது.

ஜி. ஸி. ரேச் அன் கோ.,
மலிபான் தெரு,
போன்: 2784 கொழும்பு 11 (தபாற்பெட்டி 243)

துயரம் கொண்டு துன்புறுதீர்கள்

வைத்தியர்களால் கைவிடப்பட்ட எமக்கு முதல் தடவை பாவித்த மட்டில் திருப்தியான சுகம் கொடுத்தது.

சிர நேத்திராஞ்சனத் தைலம்

வ. கந்தையா, C. G. R. கம்பனி சொல்வதாவது:

சிர ரோகத்தின் கஷ்டத்தால் கண்ணிலும் உபாதை ஏற்பட்டு பலவித வைத்தியங்கள் செய்தும் சுகம் பெருது, கடைசித்தடவையாக M. K. ஜெகநாதன் கண்வைத்தியரிடமிருந்து, சிர நேத்திராஞ்சன தைலத்தை எடுப்பித்து பாவித்தமட்டில் எனது தலையிடி முதலிய வருத்தங்கள் நீங்கியதுடன் கண்ணுக்கும் பூரணசுகத்தைப்பெற்றேன். இத்தைலத்தின் அபூர்வகுணத்தின் திறமைக்கு எமது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்ள இயலாது பேப்பர் மூலமாக இதை யாவற்கும் பிரசித்தப்படுத்துகிறேன்.

ஒப்பம்
வ. கந்தையா C. G. R. கம்பனி.

சிர நேத்திராஞ்சனத் தைலம்

கண் புகைச்சல், குத்து, கூச்சம், மாலைக்கண், சிவப்பு முதலிய கண் சம்பந்தமான சகல ரோகங்களையும், தும்மல், நீர் வடிதல் முதலிய பீனிச வகைகளையும், கபால இடி, தலைவலி, மயக்கம், இருமல், இளைப்பு, நரம்புத் தளர்ச்சி, மூலச்சூடு ஆகிய ரோகங்களையும் நிவீர்த்தி செய்து, குளிர்ச்சியையும், ஞாபக சக்தியையும் கொடுக்கும். அஸ்மா, காசம், நீரழிவுக்கும் ஓரளவு சுகங்கொடுக்கும். காலம் நீடித்த நோயாளர்கள் நேரிலும் கடிதமூலமும் விபரம் தெரிந்துகொள்ளலாம்.



விலாசம் ஆங்கிலத்தில் தெளிவாய் எழுதுக.

2 அவுன்ஸ் சீசா ரூ. 3-25

4 அவுன்ஸ் சீசா ரூ. 5-50

வியாபாரத்திற்கழகு விளம்பரம் செய்தல்

கிங்ஸ்லியில்

தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும்
சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்

பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர்
நடனங்கள், செவிக்கினிய கீதங்கள்,
கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங் கவரும்
உயரிய நடிப்புகள் நிறைந்த

கன்னிகா



தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கண்டுகளிக்கும் படம்
என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம்.எஸ. சரோஜினி,
எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் திறம்பட நடித்தது

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்
இன்று காலை 10 மணிக்கு விசேஷ மெட்னி காட்சி
சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு
முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்

"இழந்த உறுதி"

என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்
புதிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ லிமிட்டெட்டிற்காக, 1947-ம் வருஷம் டிசம்பர் மாதம் 5-ம் தேதி இப்பத்திரிகை 194 ஏ, தட்டாரத்தெரு, கொழும்பு சுதந்திரன் அச்சுக்கந்தோரில் அச்சிட்டு கொழும்பு மெயின்ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்படுவது.